21 JUN 2004

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி-07 | 21-06-2004 | திங்கட்கிழமை | ஓசை -124




## இரு சிங்களமொழி நூல்கள் நேற்று வவுனியாவில் சிறப்புற வெளியீடு

தமிழீழ விடுதலைப்புலிகளால் மாதாந்தம் வெளியிடப்படுகின்ற தேதுன்ன (வானவில்) என்ற சிங்கள மொழி பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவந்த திரு.க.வே.பாலகுமாரன் எழுதிய மௌனித்திருந்தவர் மனக்குரல், தம்பி அப்பா எழுதிய வன்னியிலிருந்து ஓர் மடல் கடிதங்களின் தொகுப்பு ஆகிய இரு நூல்கள் நேற்று வவுனியாவில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

வவுனியா நகரில் அமைந்துள்ள முத்தையா மண்டபத்தில் நேற்றுக் காலை பத்து மணியளவில் இந்நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்விற்கு வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் தலைமை தாங்கினார். வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி.அலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப்பகுதியில் இன்று முதல் கண்ணிவெடிவிழிப்புணர்வு வாரம்

(கிளிநொச்சி)

வன்னிப்பகுதியில் யுனிசெப், வெண்புறா நிறுவனங்கள் இணைந்து நடத்தும் கண்ணிவெடி விழிப்புணர்வுவாரம் இன்றுமுதல் வரும் 27ஆம் திகதிவரை சிறப்பானமுறையில் கடைப்பிடிக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கண்ணிவெடி பற்றிய விழிபபுணர்வினை ஒவ்வொருவருக்கும் ஏற்படுத்தும் வகையில் வெண்புறா நிறுவனத்தின் பத்து தொடர்பகங்கள் ஊடாகவும் வன்னிப்பகுதி எங்கும் நடாத்தப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக வீதிநாடகங்கள், பதாதைகள், வாகனக்கொடிகள், சுவரொட்டிகள், ஒலிபரப்புச் செய்திகள், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தினருடன் இருந்துகொண்டே கருணா செயற்படுவதை இனியும் எவரும் மறுக்க முடியாது!

## நாமும் அங்கிருந்தே வந்தோம் என்கின்றார் நிலாவினி

**கொழும்பில் கருணா சிறிலங்கா இராணுவத்துடன் இருந்து தான் செயற்படுகிறார். அதை எவரும் இனியும் மறுக்க முடியாது. ஏனெனில் நாங்களும் அங்கு இருந்துதான் வந்தோம். இவ்வாறு கருணாவுடன் சென்று திரும்பிவந்து புலிகளிடம் சரணடைந்த முன்னர் மட்டக்களப்பு மகளிர் படையணியின் தளபதியாக இருந்த நிலாவினி பி.பி.ஸி.குத் தெரிவித்தார்.**

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவுடன் சென்ற நான்கு பெண் போராளிகள் நேற்று முன் தினம் விடுதலைப்புலிகளிடம் தஞ்சமடைந்துள்ளனர்.

மட்டு-அம்பாறை மகளிர் படையணியின் தளபதியாக இருந்த நிலாவினி, மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த பிறேமினி, தளபதிகளாக இருந்தவர்களான தீந்தமிழ், இலாவண்யா ஆகியோர் விடுதலைப்புலிகளிடம் வந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் மகளிர் படையணியின் தளபதியாக இருந்து கருணாவுடன் தப்பியோடிய நிலாவினி நேற்றைய தினம்பிபிஸி. தமிழோசைக்குச் செவ்வி வழங்கியிருந்தார். அதன் போது அவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குற்றச்சாட்டுக்கு பாதுகாப்புச் செயலாளர் மறுப்பு

சிறிலங்கா இராணுவத்தினருடன் இணைந்துதான் கருணா செயற்படுகின்றார் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளமையை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் முற்று முழுதாக மறுத்துள்ளார்.இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்; இந்தக் குற்றச்சாட்டை தான் முற்று முழுதாக மறுக்கவிரும்புகின்றேன்.ஏனெனில் அது வெறும் குற்றச்சாட்டு என்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## செட்டிபாளையம் கடற்கரையில் அழுகிய நிலையில் இளைஞனின் சடலம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செட்டிபாளையம் கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

நேற்றுக்காலை கரையொதுங்கிய இந்தச்சடலம் தொடர்பாகப் பொதுமக்கள் களுவாஞ்சிக்குடி பொலிசில் செய்த முறைப்பாட்டை அடுத்து அவ்விடத்திற்கு விரைந்த மட்டக்களப்பு பொலிசார் சடலத்தை மீட்டுள்ளனர்.மரணமானவர் ரீசேட்டும் காற் சட்டையும் பெல்ட்டும் அணிந்திருக் கக் காணப்பட்டார்.

இதேவேளை சடலத்தைப் பிரேதம் பரிசோதனைக்காக மட்டக்களப்பு மருத்துவமனையில் ஒப்படைக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம். அஷ்மீர் உத்தரவிட்டுள்ளதுடன் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணையும் நடத்தியுள்ளார்.



கிளிநொச்சியில் நடைபெற்ற உலக அகதிகள் நாள் எழுச்சி நிகழ்வு. (படம்-சோதி)

## சர்வதேச அகதிகள் தினத்தில் பல்வேறு எழுச்சி நிகழ்வுகள்

சர்வதேச அகதிகள் தினத்தை முன்னிட்டு நேற்று கிளிநொச்சி, வவுனியா, திருமலை உட்பட பல இடங்களிலும் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன.

கிளிநொச்சியில் நேற்று மாபெரும எழுச்சிப்பேரணி நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மேற்படி பேரணி பகல் 10.15 மணிக்கு கிளிநொச்சி டிப்போச்சந்தியிலிருந்து ஆரம்பமாகி ஏ-9 பிரதானசாலை வழியாக 10.45 மணிக்கு கிளி. மாவட்ட அரச சார்பற்ற நிறுவன இணையங்களின் ஒன்றிய செயலக முன்றலை வந்தடைந்து அங்கு எழுச்சி உரைகளும், மகஜர் கையளிப்பும் இடம் பெற்றது. கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் தலைமையுரையினை

(12 ஆம் பக்கம் பார்க்க)

கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம்

விழிப்புடன் இருப்போம் விபத்தினைத் தடுப்போம்

யுனிசெவ் வெண்புறா - வன்னி

(சி-9728)

## வரிவிளம்பரம்

**கதிர்(அமல்) பல், மூக்குக் கண்ணாடியகம்.**

கண்பரிசோதித்து பொருத்தமான பிறேம்களில் உடன் கண்ணாடிகளை செய்து பெற்றுக் கொள்ள, பல் கட்டுதல், கிளிப் போடுதல் என்பன உடன்செய்து கொள்ள A-9வீதி, அரசஅதிபர் இல்லம் முன்பாக கிளிநொச்சி. கிளை.பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு.

(4718)

## பெயர்மாற்றம்

சின்னையா பரமேஸ்வரி ஆகிய எனது பெயர்21.10.2003ஆம் ஆண்டு தொடக்கம் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனது புதிய பெயர் சின்னையா பிரசாந்தி என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றேன் தகவல்,சி.பிரசாந்தி.

(4612)

## (இறபர்முத்திரை)

கிளிநொச்சியில் பொலிமர் றபர்ஸ்டாம் உடனுக்குடன் செய்து கொள்ளவும் போட்டோ கொப்பி லேமனட்டிங் போன்றவைகளையும் உடனுக்குடன் செய்து கொள்ள. பிள்ளையார் பொத்தக சாலை, கண்டிவீதி கிளிநொச்சி T.P 0212285750 (சி-9823)


## கணினிப்பயிற்சி வகுப்பு

முல்லை மாவட்டஅரச அதிபரின் அனுசரணையுடன் புதுகுடியிருப்பு உதவிஅரசஅதிபர் பணிமனையில் நடை பெற்று வரும் கணினிப் பயிற்சியின் புதியபாடமான பதிப்பகத்திற்க்கான கணினிப்பயிற்சி எதிர்வரும் 25ஆம் திகதி அன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என அரசசெயலகத்திட்டப்பணிப்பாளர் சி.குணசிங்கம் தெரிவித்தார்.நேர்முகத் தேர்வில் தோற்றியவர்களுக்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்படுள்ளதாகவும் தெரிவித்தார். (20)

# தமது எதிர்பார்ப்பை செலுத்த விரும்புவோர் எமது எதிர்பார்ப்பை புரிந்து கொள்ள மறுக்கின்றனர்

## அகதிகள் தினத்தை முன்னிட்டு கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிப்பு

சர்வதேச உலகமும் எமது மக்கள் மீதும், எமது ஏகபிரதிநிதிகளான விடுதலைப்புலிகள் மீதும், பார்வையைத் திருப்பினார்கள். சர்வதேச உதவிவழங்கும் நாடுகள் தமிழ் மக்களின் இயல்பு வாழ்விற்காக புலிகளுடன் பேசுங்கள் என்றார்கள்; பேசுகின்றார்கள் ஆனால் எங்களின் எதிர்பார்ப்பை அகதி வாழ்வை யார் போக்குவார்கள்? சர்வதேச அரசுகள் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒவ்வொருவரும் எமக்கு உதவுவதற்காக ஓடோடி வருகின்றார்கள் இவர்களில் அநேகர் தமது எதிர்பார்ப்புக்களை இங்கு செலுத்தவிரும்புகிறார்கள். எமது எதிர்பார்ப்பை யாருமே புரிந்து கொள்ளமாட்டார்களாமே! இவ்வாறு கிளிநொச்சி மாவட்டவெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் சர்வதேச அகதிகள் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் இடம்பெற்ற பேரணியின் முடிவில் வெளியிட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, எமது மாவட்டத்தில் இன்றுவரை பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் தமது சொந்த இடங்களிற்கு செல்லமுடியாமல் இருக்கின்றார்கள். அங்கு விதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றப்படவில்லை, இராணுவம் வெளியேறவில்லை, அடிப் படை வசதிகள் பூர்த்தி செய்யப்படவில்லை இத்தனைக்கும் மேலாக அரசினது உத்தரவாதத்தின் பேரில் மீள்குடியேறிய மக்களுக்கான உதவுதொகை வழங்கவில்லை. இவ்வாறு இன்னலோடு அடிப்படை வசதிகளை யாருமே பூர்த்தி செய்யாத நிலையில் இன்னும் எமது மாவட்டத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் அகதிகளாக இருக்கின்றார்கள்.ஆனால் இவற்றை மூடிமறைக்கவும் தமது தனிமனித சுயகௌரவத்தை வெளிக்கொணரவும், பதவிகளுக்காகவும், பட்டங்களுக்காகவும் அகதிகளாகிய எங்களின் தோளில் ஏறிநின்று இன்றைய அகதிகள் தினநாளில் எமது மாவட்டத்தில் எமது மக்களுக்கு எதுவித பிரச்சினைகளும் இல்லையென்று சில பேர் விளையாட்டு நிகழ்வுகள் கூடச்செய்கின்றார்கள். இது எமக்கு பெரும் ஏமாற்றத்தையும் மனவேதனையும் தரும் ஒரு விடயம். ஆகவே எமது பிரச்சினையை தாங்கள் நேரடியாகத்தொடர்பு கொண்டு சம்பந்தப்பட்டவர்களூடாக எமக்கு ஒரு நியாய பூர்வமான தீர்வுதர வேண்டும் என இன்றைய அகதிகள் தின நாளில் தங்கள் ஒருமித்த குரலாக கேட்டுக்கொள்கின்றோம் • எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிமாவட்ட இடம்பெயர்ந்த மகக்கள் வெளியிட்டுள்ள பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; பாதுகாப்பு வலயம் என்ற போர்வையிலே, எங்கள் பாட்டன், முப்பாட்டன்நிலங்களெல்லாம் பாதகரால் பறிக்கப்பட்டு, கால் எடுத்து வைப்பதற்கும் கயவனிடம் அனுமதி வேண்டிநிற்கும் எங்கள் நிலை புரியாமல் உலகிடைஎவர் சொல்வார் “ இங்கொரு பிரச்சினையும் இல்லையென ” வந்தவர்கள் தந்தார்கள் பொருட்களை மட்டுமே. உணர்வுகளும், உரிமைகளும் மறுக்கப்பட்ட நிலையிலேயே உயிர்கொடுப்பார் யாருமின்றி இன்றுவரை தொடர்கின்றோம் இழிவான நிலையிலே. வசந்தம் உலாவிய எங்கள் மனைகளை விட்டு, மரநிழல் வாழ்வுக்கு வந்தோம். வந்தாரை வரவேற்கும் பண்பினைத்தொலைத்து வருவார் யார்? தருவார் யார்? எனக் காத்துக் கிடந்தோம். கோலமிட்ட வாசல்களை விட்டகன்று மாட்டுக் கொட்டில்களேய சொர்க்கமென தலை சாய்ந்தோம்.வாரிக் கொடுத்த கைகள் கட்டியபடி, வாய்க்குவந்தபடிவசைப்படத்தலை குனிந்தோம் ஏனிந்த நிலை யெமக்கு? யார் தந்த வாழ்வெமக்கு? மனிதாபிமானத்துடன் உலகிடைவாழ்வோரே எங்களை உற்றுப்பாருங்கள்! எங்கள் அவலங்களைத்தீர்ப்பதற்காய் பாடுபடுங்கள்! எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா வாழ் இடம்பெயர்ந்த மக்கள் இலங்கை ஐ.நா.உயர்ஸ்தானிகருக்கு சமர்ப்பித்த மகஜரில் நாங்கள் இந்த அகதிமுகாம் வாழ்க்கையினை முற்றுமுழுதாக வெறுக்கின்றோம். தொடர்ந்து அகதிமுகாம்களில் முடங்கிக்கிடக்க எங்களால் முடியாது ஆனால் யுததம் நிறுத்தப்பட்டு நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டு பல வருடங்கள் கடந்த நிலையிலும் எங்கள் சொந்த நிலங்களுக்கு, எம்மை அனுப்பி வைப்பதற்கு எந்த ஒரு சர்வதேச நிறுவனமோ அல்லது அரசாங்கமோ விரும்புவதாகத் தெரியவில்லை.

நாங்கள் எமது சொந்த நிலங்களுக்குச் செல்ல வேண்டும் விவசாய விளைநிலங்களில் பயிர்ச்செய்கை செய்ய வேண்டும். கடற்றொழில், கைத்தொழில், வியாபாரம் சுயதொழில்களைமேற்கொள்ள வேண்டும் நாங்களும் சமூகத்தில் அந்தஸ்து உள்ளவர்களாக வாழ வேண்டும் என ஆசைப்படுகின்றோம்.

ஆனால் சமாதானம் என்று சொல்லப்படும் இந்த நிலையிலும் கூட உயர்பாதுகாப்பு வ்லயம் என்ற போர்வையில் சிங்கள இராணுவம் எங்கள் நிலங்களில் இருந்து வெளியேறாமல் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை தம்வசம் வைத்துள்ளது. யுத்தம் இடம்பெற்ற போது கண்மூடித்தனமாக எங்கள்நிலங்களில் விதைக்கப்பட்டமிதிவெடிகள், கண்ணிவெடிகள் பிற அபாயம் விளைவிக்கும் பொருட்கள் போன்றவை இன்று வரை அகற்றப்படாத நிலையில் நாங்கள் எவ்வாறு சொந்த நிலங்களுக்குச் செல்வது?

எங்கள் பிரதேசங்களில் மீளக் குடியேறும் போது அரசினாலும், சர்வதேச நிறுவனங்களின் கண் துடைப்புக்களினாலும் தொடர்ந்து அந்தப் பிரதேசங்களில் வசிக்க முடியாது என்பதை நாங்கள் உணர்கின்றோம். ஆகவே உடனடியாக நலன்புரிநிலையங்களை மூட வேண்டும். நாங்கள் எமது சொந்த நிலங்களில் மீள்குடியேற்றப்படல் வேண்டும்.

அதி உயர்பாதுகாப்பு வலயம். சூனியப்பிரதேசம் என்ற போர்வையில் சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருக்கும் எமதுவீடுகள். நிலங்கள் விடுவிக்கப்படல் வேண்டும். அங்கு சுயமாகவும் சுதந்திரமாகவும் வாழ்வு நடாத்த ஏற்ற இயல்பு நிலை உறுதிசெய்யப் படல்வேண்டும். எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

(சோ,(கு)


# மாபெரும் கணனி மலிவு விற்பனை

# Northern Technology (pvt) LTD

**காலம்:** 21.06.2004 தொடக்கம் 21.07.2004 வரை

**நேரம்:** காலை 8.30 தொடக்கம் மாலை 8.30 வரை

**இடம்:** #52, 2ஆம் குறுக்குத்தெரு வவுனியா.

**தொலைபேசி:** 0242221649,0244589696
0777238535,0777258460

விரையுங்கள் விரையுங்கள்

Biggest computer sales

கொள்வனவு செய்யும் ஒவ்வொரு கணனிக்கும் பரிசுகளை வெல்லுங்கள்

(சி 9930)



# ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதல் அதன்

# யுத்த தந்திரோபாயத்துக்கு இழைத்த மாபெரும் தவறு

## வெள்ளைமாளிகை அதிகாரி றிச்சட் கிளார்க்

(வோஷிங்டன்)

**செப்ரெம்பர் பதினோராம் திகதி அமெரிக்காவின் உலக வர்த்தக மையத்தின் மீது அல்-ஹைதா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவதற்கு முன்னரே ஈராக்மீது அமெரிக்கா தாக்குதலை நடத்துவதற்குத் திட்டமிட்டுவிட்டதாக வெள்ளைமாளிகை அதிகாரியான றிச்சட் கிளார்க் தெரிவித்துள்ளார்.**

ஈராக்மீதான தாக்குதலானது அமெரிக்கா தனது யுத்தத் தந்திரோபாயத்திற்கு இழைத்த மாபெரும் தவறெனவும் அவர் எழுதிய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவர் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தநடவடிக்கைகளின் இணைப்பு அதிகாரியாகப் பணி புரிந்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

இவர் எழுதிய நூலொன்றிலேயே மேற்கண்ட தகவல்களை அவர் வெளியிட்டுள்ளார்.

அவர் தனது நூலில் மேலும் குறிப்பிடும் போது, அமெரிக்காவின் உலக வர்த்தக மையக்கட்டடத்தின் மீதான தாக்குதலுக்கும் ஈராக்கிற்கும் எந்தவித தொடர்பும் இல்லையென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அது உண்மையானதா என அறியுமாறு சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கோரிக்கை விடுத்திருந்தார். என்னால் ரி.வி.எஸ் செய்தி ஸ்தாபனங்களுக்கு இதுதொடர்பாக முன்னர் தெரிவித்த கருத்துக்களை அமெரிக்க அரசாங்கம் வன்மையாக மறுத்திருந்தது.

அமெரிக்காமீது அல்ஹைதா அமைப்பினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் தொடர்பாக ஆராயக் கூட்டமொன்றை ஒழுங்கு செய்யுமாறு செப்ரெம்பர் மாதம் பதினோராம்தேதிக்கு சில மாதங்களுக்கு முன்னால் வெள்ளைமாளிகை அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதிலும் அவர்கள் இதற்குச் செவிசாய்க்கவில்லை எனவும் றிச்சட் கிளார்க் மேலும் தெரிவித்துள்ளார்.



ஈராக்கில் சாதர் நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது சியா முஸ்லிம் போராளி ஒருவர் ஆர்.பீ.ஜியை இயக்கும் விதம் பற்றிப் பெண்போராளி ஒருவருக்கு விளக்குகிறார்.

# சவுதி மீது மீண்டும் தாக்குதல் தீவிரவாதிகள் சூளுரை

அல்-ஹைதாத் தலைவர் அப்துல் அசீஸ் அல்முகதீஸ் கொலை செய்யப்பட்டதன் மூலம் அவ் இயக்கத்தைப் பலவீனமடையச் செய்திருப்பதாக சவுதிஅரேபியா தெரிவித்துள்ளது.


ஆயினும் தீவிரவாதிகள் சவுதிஅரேபியாவிற்கு எதிராக மேற்கொண்ட யுத்தத்தை மீண்டும் தொடுப்பதற்கு உறுதி பூண்டுள்ளனர்.

# சீனாவில் கடற்கொந்தளிப்பு,சூறாவளி மாணவர் இருவர் பலி; விமான சேவைகள் ரத்து

ஜப்பானின் தென்பகுதி தீவான கொக்கீவாவில் நேற்று வீசிய சூறாவளி மற்றும் கடற் கொந்தளிப்பு காரணமாக விமான மற்றும் படகுச்சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மணித்தியாலத்திற்கு 160 கிலோமீற்றர் தூரத்தில் வீசிய சூறாவளி ஜப்பானின் தென்கரையோரப்பகுதியினைத் தாக்கியுள்ளதாக காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த அனர்த்தத்தின் போது இரு கல்லூரி மாணவர்கள் இறந்துள்ளனர். இதனால் 80விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் சில படகுச்சேவைப் பாதைகளும் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.



மத்திய ஆசிய நாடான கசகஸ்தானில் உள்ள பைகனூர் கொஸ்மட்ரோமில் இருந்து ஏவப்பட்ட ரஷ்ய புரோட்டோன்-எம் ரொக்கெட் அமெரிக்காவின் இன்டல்செற் 10 செய்மதியை காவிச்செல்கிறது.

# அமெரிக்கா இன்னுமொரு மன்னிப்பைப்பெற முயற்சிப்பதை பாதுகாப்புச்சபை எதிர்க்க வேண்டும்—கொபிஅனான்


குற்றவியல் வழக்கைத் தொடர்கின்ற சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் அமெரிக்கா இன்னுமொரு மன்னிப்பைப் பெறமுயற்சிப்பதை ஐ.நா.செயலாளர் கொபி அனான் கண்டித்ததுடன் இதனைப் பாதுகாப்புச்சபை எதிர்க்க வேண்டும என அழுத்தம் கொடுத்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பாதுகாப்புச்சபைத் தூதுவர்களுடன் மதியபோசனத்திற் கலந்து கொண்டபோதே அவர் இவ்விடயத்தை எதிர்க்கும்படி அழுத்தம் கொடுத்துள்ளார்.

அடுத்த கிழமை நடைபெறவுள்ள சுமார் 40 நாடுகளுக்கு மேல் பங்குபற்றவுள்ளதான பொதுக் கூட்டமொன்றின் போதே இவ்விடயம் தொடர்பாக விவாதிக்கவுள்ளதாகவும் அப்பொழுது அமெரிக்காவினால் ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் கைதிகள் துஸ்பிரயோக விடயம் கருத்திற்கொள்ளப்படும் என்றும் கூறப்படுகின்றது.

மன்னிப்பு வழங்குதல் பிழையான செயல் எனவும் சட்டத்தின் பெறுமதியில் சந்தேகத் தன்மையை ஏற்படுத்தும் என்றும் பாதுகாப்புச்சபை இதை ஏற்றுக்கொள்ளும் என நான் நினைக்கவில்லை என்றும அனான் செய்தியாளருக்குக் கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாகக் கடந்த வருடங்களிலும் அனான் எதிர்ப்புத் தெரிவித்து வந்ததோடு கடுமையான சொற்பிரயோகங்களையும் இவ்வேளைகளிற் பாவித்துவந்தார். குறிப்பாக அமெரிக்காவினால் ஈராக்கைதிகள் மீது மனித உரிமைகள் மீறப்பட்ட சம்பவத்தைக் குறிப்பிடலாம்.



ஈராக்கைதிகள் துஸ்பிரயோக விவகாரத்திற்கு மன்னிப்பு வழங்கலை எதிர்த்து ஒருவர் அழுத்தம் கொடுப்பது ஒரு துரதிஸ்டமான விடயம் எனத் தான் நினைப்பதா கவும அவர் கூறினார். இச்சூழ் நிலையில் ஒருமன்னிப்புக்கு எதிராக அழுத்தம் கொடுப்பது என்பது புத்திசாலித்தனமற்றதாக இருந்தாலும் பாதுகாப்புச் சபையின் ஒரு பகுதி இதற்கு அனுமதி அளித்தால் கூட அதுமிகவும் கூடிய புத்திசாலித்தனமற்றதாகிவிடும் என்று அவர் கூறினார். அமெரிக்கா, ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் கைதிகள் துஸ்பிரயோகம் தொடர்பாக அமெரிக்கப் படையினரிடம் விசாரணை நடத்திக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் கைதிகள் சித்திரவதை செய்யப்படுவதாக செய்திகள் பரவும் நிலையில் முன்னாள் ஆப்கானிஸ்தானிய பொலிஸ்வீரர் ஒருவர் தான் பாதிக்கப் பட்டதை விபரிக்கிறார்.

# அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கைக்கு எதிராக துருக்கியில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி

அமெரிக்க சனாதிபதி புஷ்சின் வெளிநாட்டுக்கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து துருக்கியில் நேற்று முன்தினம் ஏராளமானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



துருக்கியில் சன்ல கிராமத்தில் அண்மையில் ஏற்பட்ட சூறாவளியில் சேதமடைந்த வீட்டையும் கார்களையும் காண்கிறீர்கள்.

அங்காரா நகரில் உள்ள அமெரிக்கப்படையினரின் முகாமிற்கு முன்பாக நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தின் போது ஏற்பட்ட கலவரத்தில் பலர் காயமடைந்துள்ளனர். ஈராக்கின் ஆட்சியைக் கைப்பற்றிய அமெரிக்க அந்நாட்டின் வடபகுதியில் விமானங்கள் பறப்பதற்குத் தடைவிதித்திருந்ததுடன் அதனைத் தீவிரமாகக் கண்காணிக்க அங்காராவில் முகாமும் அமைத்துள்ளது. இதனைக் கண்டித்தும் ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாமை அந்நாட்டு இடைக்கால அரசிடம் ஒப்படைப்பது குறித்து புஷ் முரண்பட்ட கருத்துக்களைக் கூறிவருவதைக் கண்டித்தும் இவ் ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாதிகளின் தாக்குதல்களைத் தடுத்துநிறுத்த மத்திய லண்டனில் வீதித்தடை அமைக்கப்படும்

## -பிரிட்டிஷ் உளவறியும் அதிகாரிகள்

பயங்கரவாதிகள் மேற்கொள்ளக்கூடிய தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் மத்திய லண்டனில் பெரும் பகுதியொன்றில் வீதித்தடைகள் போடும் திட்டங்களை பிரிட்டிஷ் உளவறியும் அதிகாரிகள் தயாரித்து வருவதாக நேற்று வெளியான லண்டன் ஒப்சேவர் பத்திரிகை தெரிவித்துள்ளது. அரச திணைக்களங்கள், சுற்றுலா மையங்கள் என்பன அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிய வருவதால் அமைச்சுக்களைச் சுற்றியுள்ள வீதிகளில் தடைகள் போடப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கிற்கு எதிரான அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் ஆதரவுவழங்கியமையால் இஸ்லாமியத் தீவிரவாதிகள் பிரிட்டனை இலக்குவைத்துத் தாக்கலாம் எனும் அச்சம் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# படை முகாம்களாகத் தொடர்ந்தும் பாடசாலைகள்

# மட்டக்களப்பின் கல்விநிலை பெரும் பாதிப்பு!



## 14 பாடசாலைகள் செயலிழப்பு

(அலுவலக செய்தியாளர்)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்புக்களால் 14 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இதேவேளை, 16 பாடசாலைகள் வேறிடங்களில் இயங்கியும் வருகின்றன.**

பாடசாலைக் கட்டடங்களில் மற்றும் பாடசாலைச் சுற்றாடலில் சிறிலங்கா இராணுவ முகாம்கள் அமைந்துள்ளமையே பாடசாலைகள் இயங்காமைக்கும், பிற இடங்களில் இயங்கி வருவதற்கும் காரணமாகும்.

இதன் காரணமாக கல்வி நடவடிக்கைகளுக்குப் பெரும் முட்டுக்கட்டை இடப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து படையினர் இதற்குத் தடையாகவும் உள்ளனர்.

இதேவேளை, மட்டக்களப்பில் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக கல்வியில் பின்தங்கும் நிலை காணப்படுகிறது.

ஆங்கில ஆசிரியர்களைப் பொறுத்தவரை மட்டக்களப்பு வலயத்தில் 25 வெற்றிடங்களும், கற்குடா வலயத்தில் 124 வெற்றிடங்களும், பட்டிருப்பு வலயத்தில் 110 வெற்றிடங்களும் உள்ளன. கணித ஆசிரியர்களைப் பொறுத்தவரை மட்டக்களப்பு வலயத்தில் 43 வெற்றிடங்களும், கற்குடா வலயத்தில் 38 வெற்றிடங்களும், பட்டிருப்பு வலயத்தில் 36 வெற்றிடங்களும் நிலவுகின்றன.விஞ்ஞான ஆசிரியர்களைப் பொறுத்தவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் 67 வெற்றிடங்கள் உள்ளன. (சோ,கு)

## புனரமைப்பு

விசுவமடு பரவல் நீர்ப்பாசனக் கமக்காரர் அமைப்பின் புனரமைப்பு உடையார்கட்டு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது. இதில், த.பொ.மே. நிறுவனத்தின் முல்லை. மாவட்டப் பொறுப்பாளர், பிரதேச இணைப்பாளர், பெருமளவிலான விவசாயிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (08)

### முல்லை. மாவட்டத்திலுள்ள

## நன்னீர் மீன்பிடிச் சங்கங்களின் செயற்குழு உறுப்பினர் சந்திப்பு

(புதுக்குடியிருப்பு)

முல்லை. மாவட்ட நன்னீர் மீன்பிடிச் சங்கங்களின் செயற்குழு உறுப்பினர்களின் சந்திப்பு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை. மாவட்டச் செயலகத்தில் 18-06-2004 வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை. மாவட்டப் பொறுப்பாளர் தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில், தண்ணிமுறிப்பு, கணுக்கேணி, மடவளசிங்க உறுப்பினர்களும்; விசுவமடு, இடைக்கட்டு, உடையார்கட்டு உறுப்பினர்களும், முத்துஐயன்கட்டு உறுப்பினர்களும், த.பொ.மே. நிறுவனத்தின் முல்லை. மாவட்டத் துணைப் பொறுப்பாளர், மாவட்டச் செயலாளர், பிரதேச இணைப்பாளர், கிராமிய அபிவிருத்தி வங்கி மேலாளர் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (08)

## பரந்தன்–பூநகரி வீதி போக்குவரத்து பாதிப்புறலாம்!

பரந்தன் - பூநகரி வீதியில் 06ஆவது கிலோ கல்லுக்கு அண்மையாகவுள்ள குஞ்சுப்பரந்தன் பகுதிப் பாலம் பலத்த சேதமடைந்து காணப்படுகிறது. 4 அடி அகலத்தில் பாலம் இடிந்து ஓட்டையாக வீதியின் ஒரு பக்கத்தில் காணப்படுகின்றது. பாலத்தில் 7 அடிப் பகுதி மட்டும் எஞ்சியுள்ளது. இதனால் வாகன சாரதிகள் மிகுந்த அச்சத்துடனேயே பாலத்தைக் கடந்து செல்கின்றனர். இப்பாலம் விரைவாகத் திருத்தப்படாதவிடத்து போக்கு வரத்துத் துண்டிக்கப்படும் அபாயம் காணப்படுகிறது. இதன் காரணமாக பூநகரி ஊடாக மேற்கொள்ளப்பட்டுவரும் பேருந்துப் பணிகள் அனைத்தும் பாதிப்படையும் என்பதுடன், இதனால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாக வேண்டி ஏற்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (14)

### சிரமதானப் பணி மூலம்

## ஏ-9 வீதியின் இருமருங்கிலுமுள்ள பற்றைக்காடுகள் வெட்டி அழிப்பு




(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ காவல்துறையினர் மற்றும் கிளி.மாவட்ட அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பிரதான வீதியின் இரு பக்கங்களிலுமுள்ள பற்றைக்காடுகள் சிரமதானப் பணிமூலம் வெட்டித் துப்புரவு செய்யப்பெற்றது.

நேற்று முன்தினம் அக்கராயன் பிரதேச காவல் துறையினரின் முன்னெடுப்பில் அக்கராயன் பகுதி வாழ். மக்களினால் 155ஆம் கட்டைப் பகுதியிலிருந்து கரடிப்போக்கு சந்தி வரையும் வீதியின் இருமருங்கிலுமுள்ள பற்றைக் காடுகள் சிரமதானப்பணி மூலம் வெட்டித்துப் புரவு செய்யப்பட்டன.

அதே போன்று கிளி. மாவட்ட அரசியல் துறையினர், மற்றும் கிளிநொச்சிப் பிரதேசக் காவல்துறையினரும் இணைந்து சிரமதானப்பணி மூலம் கரடிப்போக்கு சந்தியிலிருந்து பரந்தன் சந்திப்பக்கமாக பிரதான வீதியின் இரு மருங்கிலுமுள்ள பற்றைக்காடுகளை வெட்டி அழித்தமை குறிப்பிடத்தக்கது. இப்பணி தொடர்ந்து ஆனையிறவுச் சந்தி வரை மேற்கொள்ளப்பெறவுள்ளதென கிளிநொச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (சோ, கு)

## முன்பள்ளி சிறார்களின் திறனாய்வுப் போட்டி நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

திருவையாறு இரண்டாம் பகுதி தூயவன்முன்பள்ளித் சிறார்களினதும் இரணைமடு கமல் முன்பள்ளி சிறார்களினதும் திறனாய்வுப்



போட்டி நிகழ்ச்சி நேற்று முன்தினம் மாலை 3.00 மணியளவில் தூயவன் முன்பள்ளி மைதானத்தில் சிறப்புற நடைபெற்றது.

ஆரம்பநிகழ்வாக மங்கல விளக்கேற்றல் இடம் பெற்றது. இதனை சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுத்தலைவர் இரத்தினசிங்கம், அரசியல் துறையைச் சேர்ந்த சுமன், திருவையாறு விவசாய கூட்டுறவுச் சங்கத் தலைவர் பொன்னம்பலநாதன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியினை பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ப்பரிதி ஏற்றிவைத்தார். தொடர்ந்து அகவணக்க நிகழ்வினை அடுத்து மாவீரன்தூயவனின் திருவுருவப்படத்திற்கு அவருடைய தந்தையார் சந்திரன் ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தார். அடுத்து நிறுவனக் கொடியினை வெ.கிருஷ்ணா ஏற்றிவைக்க முன்பள்ளிகளின் கொடியினை அந்த முன்பள்ளி ஆசிரியர்கள் ஏற்றி வைத்தனர். பின்னர் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டது. அடுத்து மாணவர்கள் சத்தியப்பிரமாணம் செய்தார்கள். தொடர்ந்து வரவேற்புரையினை சமூகபொருளாதார அபிவிருத்திக் குழுத்தலைவர் செ.இரத்தினசிங்கம் நிகழ்த்தினார்.அடுத்து ஆசியுரையுடன் நிகழ்வு ஆரம்பமானது.

மாணவர்களது இசைவும் அசைவும் நிகழ்ச்சி முடிவுறத் திறனாய்வுப் போட்டி நடைபெற்று வெற்றிபெற்ற சிறார்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டது. இந்நிகழ்விற்கு பெற்றோர்கள், நலன்விரும்பிகள், போராளிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (தீ, கு,)

## சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவிற்கு முதற்கட்ட சமூகநலப் பயிற்சிநெறி ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவினர் அரச சார்பற்ற நிறுவனமான ஏ.எஸ்.பி. நிறுவனத்தின் நிதியுதவியுடன் சமூக நலப்பயிற்சி நெறியை ஆரம்பித்துள்ளன. முதற்கட்டத்தின் ஆரம்ப நிகழ்வு கடந்த வெள்ளியன்று காலை 9.00 மணிக்கு கிளிநொச்சியில் நடைபெற்றது.

ஏ.எஸ்.பி. நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி செல்வி.கத்தரீன், வன்னிக்கான பிரதிநிதி மார்டீன், கிளி. வலயக்கல்விப்பணிப்பாளர் அரியரத்தினம், வடக்குக்கிழக்கு மேம்பாட்டு நிறுவனத் தலைவர் சதாதனபாலசிங்கம், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவைச் சேர்ந்த விபுலேந்திரன் ஆகியோரால் மங்கல விளக்கு ஏற்றிவைக்கப்பட்டது. தொடர்ந்து சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் செய லாளர் இரத்தினசிங்கம் வரவேற் புரையையும், தலைமையுரையை வன்னிக்கான சென்ஜோன்ஸ் அம் புலன்ஸ் படைப்பிரிவின் விசேட ஆணையாளர் சிறிதரனும் வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து சிறப்புரைகள் விபுலேந்திரன், அரியரத்தினம், சதாதனபால சிங்கம், செல்வி. கத்தரீன், மார்டீன், ஆகியோரால் வழங்கப்பட்டன.

உரை நிகழ்வுகளைத் தொடர்ந்து பயிற்சி நெறியின் முதற்கட்ட நிகழ்வாக கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 27 பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும், நிறுவன முதன்மை ஆசிரியர்களுக்குமான மூன்று நாட்பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டது.

பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வில் முதலுதவியும், செய்முறைகளும், தொடர்பாகவும்; உடலமைப்பும், தொழிற்பாடுகளும் தொடர்பாகவும் சிறிதரன், விபுலேந்திரன் ஆகியோரால் விரிவுரைகள் வழங்கப்பட்டன.

பயிற்சி நெறியின் 2ஆம் கட்டமாகப் பாடசாலை மாணவர், சமூகமட்டத்தில், பயிற்சி நெறிகளை வழங்கி விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளதோடு, இத் திட்டம் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் விரிவுபடுத்தப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.(தீ)

## முல்லை.அரசஅதிபர் செயலகத்தில் புதிய கட்டடங்கள் திறந்துவைப்பு

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் செயலகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடங்கள் அண்மையில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டன.

கடந்த 16ஆம் திகதி காலை 11.30 மணிக்கு பிரதிக்கணக்காய்வுத் தலைமை அதிகாரி எம்.செல்வரட்ணம் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார், கச்சேரி உதவித்திட்டப்பணிப்பாளர் திருமதி.கி.மரியமலர், நிர்வாக அலுவலர் இரட்ணராஜா, திட்டமிடல் கிளையைச்சேர்ந்த வில்வராசா, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.மோ. சிவமயம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து புள்ளிவிபரக்கிளை கட்டடத் தொகுதியினை முல்லை. மாவட்ட அரசஅதிபரும், விளையாட்டுத்துறை அலுவலகத்தை கச்சேரி இணைப்பாளர் விஜயகுமாரும், கணக்காய்வு அலுவலகத்தினை பிரதம கணக்காளர் லோ.செளந்தர நாயகமும் திறந்து வைத்தனர்.

கருத்துரையை முல்லை.மாவட்ட அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் வழங்கினார்.நன்றியுரையினை புள்ளிவிபரக்கிளை அதிகாரி வழங்கினார். இதில் கச்சேரிப் பணியாளர்கள், திணைக்களத் தலைவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். (20)

# சுற்றுச் சூழல் சுகாதார நிலைமைகளை மாதாந்தம் கூடி ஆராயத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் சுற்றுச் சூழல் மற்றும் சுகாதார நிலவரங்கள் தொடர்பாக ஆராயும் கூட்டத் தொடர்களை மாதாந்தம் யாழ். செயலகத்தில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டின் சுற்றுச் சூழல் மற்றும் சுகாதார நிலைமைகள் குறித்து உரிய கவனம் செலுத்தப்படாமையால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளையும் அதன் பின்விளைவுகளையும் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்தே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் எதிர்காலத்தில் ஒவ்வொரு மாதமும் இடம் பெறவுள்ள கூட்டத் தொடர்களில் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலர்களும் கலந்து கொண்டு தத்தமது பிரதேசங்களில் உள்ள சுற்றுச் சூழல் மற்றும் சுகாதார நிலைமைகள் குறித்து பிரஸ்தாபித்து யாழ்.அரச அதிபரின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வர். (33)

# மீளத்திறக்கக் காண்பிக்கும் மெத்தனப் போக்கை கைவிடுக!

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாள் வடக்கில் சிறிலங்கா இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் ஆக்கிரமிக்கப்பட்ட மருதங்குளம் ஜெ.334 பிரிவில் இருக்கும் அரசினர் தமிழ்கலவன் பாடசாலையைத் திறப்பதற்கு இப்பகுதி மக்கள் கடந்த ஒரு வருடமாய் எடுத்த முயற்சியின் பயனாய் படைத்தரப்பு, பொதுமக்கள், யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் ஆகியோர் கலந்து கொண்ட பேச்சுவார்த்தையின் பின்பு 10.05.2004 அன்று படைத்தரப்பால் விடுவிக்கப்பட்ட இப்பாடசாலையை மீளத்திறப்பதற்கு தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகம் மெத்தனப்போக்கைக் கடைப்பிடித்துவருகிறது.

தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகம் முன்னால் மறியற்போராட்டம், ஆறுதடவைக்கு மேல் படைத்தரப்பு பொதுமக்கள் பேச்சுவார்த்தை என நீண்ட மக்கள் போராட்டத்தின் பயனாய் படைத்தரப்பால் மீளக் கையளிக்கப்பட்ட இந்தப் பாடசாலையைத் திறப்பதைத் தாமதப்படுத்தி வரும் வலயக்கல்வி அலுவலகத்தின் செயல் இப்பகுதி மக்களின் சீற்றத்தை மீண்டும் கிளப்பி இருக்கின்றது. ஆண்டு 11வரை உள்ள இப்பாடசாலை தற்பொழுது மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையுடன் தற்காலிகமாக இணைந்து செயற்படுவது குறிப்பிடத்தக்கது. (28)

# யாழ். கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்!

## மாகாண ஆளுநரின் செயலாளர் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின்போது சேதமாக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் அமிர்தலிங்கம் உறுதியளித்துள்ளார்.**

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் யாழ். மாவட்டக் கூட்டுறவுத்துறை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் பொருட்டு இடம்பெற்ற முக்கிய கலந்துரையாடல் ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பி. கனகசபாபதி தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்டக் கூட்டுறவுத்துறைப் பொறுப்பாளர் புஸ்பன், கூட்டுறவு ஆளணி அபிவிருத்தி ஆணையாளர் திருமதி. சிவலிங்கம் ஆகியோர் உட்பட யாழ். மாவட்டத்தில் உள்ள சகல துறைசார் கூட்டுறவுச் சங்கங்களினதும் தலைவர், செயலாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது சிறிலங்கா அரசின் திட்டமிட்ட அடிப்படையிலான புறக்கணிப்பு நடவடிக்கைகள் மற்றும் இனவாதச் செயற்பாடுகளால் யாழ். மாவட்டக் கூட்டுறவாளர்கள் பழிவாங்கப்படுவதாகவும், இதனால் யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் முழுப்பயனையும் மக்கள் பெற முடியாதிருப்பதாகவும் சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்தே அமிர்தலிங்கம் மேற்படி உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

இதற்கமைவாக கடந்த கால ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் சேதங்களை எதிர்கொண்ட கூட்டுறவுச் சங்கங்களின் இழப்புகள் தொடர்பானவிரிவானஅறிக்கையை உடனடியாகத் தமக்கு அனுப்பிவைக்குமாறும், பாதிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.(33)

# குடும்பத்தலைவரை இழந்த பெண்களுக்கு உதவித்திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கணவன்மாரை இழந்த பெண்களுக்கான உதவித் திட்டம் ஒன்றைஅமுல்செய்ய அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவர் ஆலயம் நடவடிக்கை எடுத்துள்ளது.

துரிதமாக நடைமுறைக்கு வரவுள்ள இத்திட்டத்தின் கீழ் கடந்தகால யுத்த அனர்த்தங்களால் கணவன்மாரை இழந்த பெண்கள் உள்வாங்கப் படவுள்ளனர். இவ்வாறு உள்வாங்கப்படவுள்ள பெண்களுக்கான உதவித்திட்டங்களை அமுற்படுத்துவது குறித்து தற்பொழுது ஆராயப் பட்டு வருவதாகத் தெரியவருகிறது. (33)

# மகப்பேற்று மருத்துவமனை இன்று முதல் இயங்கும்

(தென்மராட்சி)

யுத்தஅனர்த்தங்களால் இதுவரை காலமும் மூடப்பட்டிருந்த கொடிகாமம் மத்திய மருந்தக மகப்பேற்றுமனை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச்சபையினுடைய விடாமுயற்சியினால் இன்று திங்கட்கிழமை அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

சுகாதார சேவைகள் பதில் மாகாணப்பிரதிப்பணிப்பாளர், ஆர். தெய்வேந்திரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

(28)

# இரு பாடசாலைகளை புனரமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மட்டுவில் தெற்கில் கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகை ளால் சேதமாக்கப் பட்ட இரு பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. அந்தவகையில் மட்டுவில் தெற்கில் உள்ள அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை மற்றும் சரஸ்வதி மகாவித்தியாலயம் என்பனவே இவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான அபிவிருத்திப் பணிகளுக்கு எனப் பிரதேச புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் 120 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் தலா 60இலட்சம் ரூபா செலவு செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (33)

# ஆங்கில தினப் போட்டிகள் குறித்த அறிவிப்பு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையேயான ஆங்கில தினப் போட்டி நிகழ்வுகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் யாழ். வலயக்கல்விப் பணிமனையில் வெளியிடப்பட்டுள்ளன.

அந்தவகையில் மேற்படி கல்வி வலயத்தில் உள்ள கோட்டமட்டத்திலான போட்டிகள் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்பதாகவும், வலயமட்டத்திலான போட்டிகள் அடுத்தமாதம் 5ஆம் திகதிக்கு முன்பதாகவும், மாவட்ட மட்டத்திலான போட்டிகள் அடுத்தமாதம் 14ஆம் திகதிக்கு முன்பதாகவும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# அவசர புனரமைப்புக்களை மேற்கொள்ளும் குடாநாட்டுப் பாடசாலைகள் விபரம் கோரல்

## புதிய திட்டத்தின் கீழ் நடவடிக்கை

(வடமராட்சி)

புதிய அரசினால் அமுற்படுத்தப் படவுள்ள அவசர புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புத் திட்டங்களில் கல்விச்செயற்பாடுகளுக்கு கூடுதல் முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ் குறுகிய கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் முன்னெடுக்கப்படவேண்டிய திட்டங்களை நிரற்படுத்தித்தருமாறு வட-கிழக்கு மாகாண சபையின் கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது.

குறிப்பாக மூன்று மாதத்திற்கும் குறைவான காலப்பகுதியினுள் பாடசாலைகளினுள் முன்னெடுக்கப் படவேண்டிய அவசர திட்டங்கள் தொடர்பாகவே அவசர புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புத் திட்டத்தில் கூடுதல் அக்கறை காட்டப்பட்டுள்ளது.

இதனிடையே வட-கிழக்கு மாகாணசபையின் கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அவ்வாறான பாடசாலைத் தேவைகள் தொடர்பாக விபரங்களை சமர்ப்பித்து உதவுமாறு யாழ். மாவட்டத்திலுள்ள கல்விப் பணிப்பாளர்களைக் கோரியுள்ளார்.

எனினும் அண்மையில் குடாநாட்டிற்கு விஜயம் செய்திருந்த சனாதிபதியின் ஆலோசகர் ஹரீம் பீரிஸ் முன்னைய அரசினால் வகுக்கப்பட்டிருந்த அவசர புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளை புதிய அரசு தொடர்ந்தும் முன்னெடுக்குமென அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

## முக்கிய கூட்டம்

யாழ். மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் முக்கிய கூட்டம் ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் யா.ழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கங்களின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டு புதிய தீர்மானங்களும் எடுக்கப்படவுள்ளதால் சம்பந்தப்பட்டவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான போட்டிகள்

(தென்மராட்சி)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு தென்மராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் சுற்றாடல் சம்பந்தமான மாபெரும் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டி, சுவரொட்டி ஆக்கம், விளம்பர ஆக்கம், அறிவித்தல், நாடகப் போட்டி, தாளலயப் போட்டி ஆகியன இடம்பெறவுள்ளன. இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இப்போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் தங்களது படைப்புக்களை பாடசாலை அதிபர், ஆசிரியர் ஊடாக உ[illegible]த்தி நகர சபை, பிரதேசசபைக் காரியாலயங்களில் ஒப்படை[illegible]ம்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (28)

# வைத்தியசாலை மீண்டும் செயற்பட ஆரம்பம்


கடந்த 14 வருடங்களுக்கு மேலாக இயங்காமல் இருந்த புங்குடுதீவு மாவட்ட அரசினர் வைத்தியசாலை மீண்டும் இயங்க அனுமதி கிடைத்துள்ளது.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் முயற்சியால் பிரதி சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரம் பணிப்பின் பேரில் ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றிய டாக்டர் ஒருவர் கடந்த 01.06.2004 முதல் புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலைக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது வெளிநோயாளர் பிரிவு மட்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் மகப்பேற்றுப் பிரிவும், நோயாளர் தங்கும் விடுதிகளும், அம்புலன்ஸ் வசதியும் விஸ்தரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

# நோயைக்குணப்படுத்த நல்ல மருத்துவரை தேடிக் கொள்வது சந்திரிகாவின் பொறுப்பு

சிறிலங்காவின் பாராளுமன்றம் வேறு எப்போதும் முகம் கொடுக்காத பிரச்சினைக்கு தற்போது முகம் கொடுத்துள்ளது. காரணம் அது பாராளுமன்றத்தில் பெரும்



பான்மை (ஆளும் கட்சி) உறுப்பினர்களைக் கொண்டிராத ஒன்றாகும். பிரித்தானியப் பாராளுமன்ற மரபுகளுக்கு ஏற்ப பெரும்பான்மையினரின் நம்பிக்கையைப் பெறும் கட்சி ஒன்று ஆட்சி செய்யவேண்டும்.

கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் முன்னணிக்குக் கிடைத்த ஆசனங்கள் 105 மட்டுமே. பின்னர் டக்ளஸ் தேவானந்தாவும், ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்களான கத்தலுவே ரத்ன சீக, அபெரக்க புஞ்ஞானந்த ஆகிய பிக்குகளும் ஆளும் கட்சிக்கு ஆதரவு தெரிவித்ததால் உறுப்பினர் தொகை 108 ஆக உயர்ந்தது. எனினும் பின்னர் கத்தலுவே ரத்ன தேரர் தற்போது இராஜினாமா செய்துள்ளதால் அது பாரதூரமான சட்டப்பிரச்சினையாகியிருக்கிறது.

"ஆளும் கட்சிக்குப் பாராளுமன்றப் பெரும்பான்மை இல்லாது விட்டாலும் பொது மக்களின் பெரும் ஆதரவு தமது கூட்டணிக்கு இருக்கிறது" என்பது ஜே.வி.பி.யின் வாதமாகும். மக்களின் பலத்தை மறுக்கமுடியாது என்பதையும் ஜே.வி.பி. வலியுறுத்துகிறது. ஆயினும் பாராளுமன்றத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஐ.ம.சு. முன்னணிக்கு இன்னும் 7 அல்லது 8 ஆசனங்கள் தேவை. இந்த 7 பேரின் ஆதரவு கிடைக்காததால் பாராளுமன்ற நடவடிக்கைகள் தற்போது முட்டுக்கட்டையாகியிருக்கிறது. முன்னர் ஒரு மாதத்தில் குறைந்தளவு 8 நாட்கள் பாராளுமன்றம் கூடிய அதேவேளை இப்போது மாதத்தில் ஒன்று அல்லது இரண்டு நாட்கள் மட்டுமே பாராளுமன்றம் கூடுகிறது. முதன் முதல் ஏப்ரல் 22ஆம் திகதி பாராளுமன்றம் கூடியது. அன்றே அங்கு பெரும் அமளி துமளி ஏற்பட்டு ஒருவகையில் சபாநாயகர் தெரிவு முற்றுப்பெற்றது. அதன் பின்னர் மே 18இல் பாராளுமன்றம் கூடி பிரதிச் சபாநாயகர் தெரிவு நடைபெற்றது. அன்று கந்தப்பளை விவகாரம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பின்னர் அதன் ஏனைய விடயங்கள் பிறிதொரு நாளுக்கு ஒத்திப்போடப்பட்டது. அதனைத் தொடர்ந்து கடந்த ஜூன் எட்டாம் நாள் பாராளுமன்றம் கூடிய வேளை ஆளும் கட்சி தனது பாராளுமன்றப் பெரும்பான்மையை நிரூபிப்பதாக அறிவித்த போதும் அதற்கு அவகாசம் கிடைக்காததால் வரும் ஜூலை 20ஆம் திகதிக்குப் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் இம்மாதத்திற்குள் பாராளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமல் போனமை மேலும் சிக்கலை ஏற்படுத்துகிறது. சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதும சந்திரிகாவுக்கு தலையிடியாகியிருக்கிறது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் விடுத்த கோரிக்கையை நிறைவேற்றமுடியாது என்று அரசு கூறியதையடுத்து அவருக்கு வழங்கப்பட்ட விசேட பாதுகாப்பும் நீக்கப்பட்டு விட்டது. அதனால் ஆறுமுகம் தொண்டமானின் ஆதரவும் அரசுக்குக் கிடைக்காது விட்டது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவருடன் குமாரி கூரேக்கு தொடர்பு இருப்பதாகக் கூறி ஹக்கீமை அரசின் காலடிக்கு கொண்டு வர எடுத்த முயற்சியும் பலனளிக்காமல் போய்விட்டது.

ஆளும் கட்சி இந்த விவகாரங்களைக் கையாண்டதும் மிகவும் கீழ்மட்டத்திலேயே. இவ்விருகட்சிகளைப் போன்று தமது கட்சியையும் அரசு இணைக்க முயற்சிப்பதாக ஜாதிக ஹெல உறுமய பிக்குமார் குற்றம் சுமத்துகின்றனர். இரண்டு பிக்குமார்களைத் தமது கூட்டணிக்குள் இணைக்க முயன்றதைத் தெரிவித்து ஜாதிக ஹெல உறுமய அரசுடன் பகைத்துக்கொண்டிருக்கிறது.

அத்துடன் அக்கட்சிக்கெதிராக பல்வேறு பிரசாரங்களை ஆளும் கட்சி மேற்கொள்வதாகவும் ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது. ஆகவே சிறுபான்மைக் கட்சிகளை இணைத்து தமது பெரும்பான்மையை நிரூபிக்க எடுத்த முயற்சியும் சந்திரிகாவின் ஐ.ம.சு.முன்னணிக்கு சாத்தியமற்றுப் போயிருக்கிறது.

அண்மையில் ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்சவும் கூட்டணிக்குள் பெரும்பான்மையில்லாவிட்டால் ஆட்சிப் பொறுப்பை ரணிலிடம் ஒப்படைப்பது நல்லது எனக் கூறியிருக்கிறார். அது ஒரு அரசியல் யதார்த்தமாயினும் மக்கள் பொதுத் தேர்தலில் ஐ.ம.சு.முன்னணியை ஆதரித்து வாக்களித்ததால் ரணில் ஆட்சிப் பொறுப்பை உடனடியாக ஏற்பாரா என்பதும் சந்தேகமே. அவர் சிலவேளை சனாதிபதி பதவிக்கு குறிவைத்திருக்கலாம்.

இவ்வாறான சிக்கல் நிலைகளால் ஒரு ஆட்சி மாற்றத்தைக் கருதி ஐ.ம.சு.முன்னணிக்கு வாக்களித்த மக்களே பெரிதும் பாதிப்படைகின்றனர். இவ்வரசாங்கம் ஆரம்பத்திலேயே ஊழல் மோசடித் தடைச்சட்டம் ஒன்றைப் பாராளுமன்றில் உடனடியாக கொண்டுவருவதாக வாக்குறுதியளித்தது. ஆளும் கட்சி பலத்தைப் பெறும் வழி தெரியாததாலும், முரண்பட்ட கொள்கைளினாலேயுமே அதற்குள் இந்தப் பிரச்சினை தோன்றியிருக்கிறது. என்பது விமர்சகர்களின் கருத்தாகும். தற்போதைய நிலையில் சனாதிபதிக்கு நாட்டை நிர்வகிக்க வேண்டுமாயின் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப் பெறுவது இன்றியமையாதது. எனினும் பணத்தினாலோ, அதிகாரத்தினாலோ, அச்சுறுத்தலினாலோ, ஏனைய கட்சி உறுப்பினர்களைக் கடத்துவதன் மூலமோ அவ்வாறான ஆதரவைப் பெற்றுவிட முடியாது. அவ்வாறு நினைப்பதும் தவறு. சிலவேளை சனாதிபதியைவிட புதிய பிரதமர் மகிந்தராஜபக்ஷவுக்கு மேற்படி ஆதரவைப்பெற முடியும் என சிலர் நினைக்கலாம்.

எவ்வாறாயினும் இந்த நோயைக்குணப்படுத்த சிறந்த மருத்துவர் ஒருவரைத் தேடிக் கொள்வது சந்திரிகாவின் பொறுப்பாகும். அந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டியதும் கூட்டணியை நம்பி வாக்களித்த மக்களுக்கே. சிறிலங்காவின் தேர்தல் நடைபெற்று முடிந்தவுடனேயே இந்தியப் பொதுத் தேர்தலும் நடைபெற்றது. யாரும் எதிர்பார்க்காதவாறு காங்கிரஸ் கூட்டணி 320 இடங்களில் வெற்றிபெற்று லோகசபைக்குத் தெரிவாகியது . அங்கு சோனியா காந்தியிடம் ஆட்சிப் பொறுப்பை வழங்க மக்கள் தீர்மானித்தனராயினும் வேறுவழியின்றி சீக்கிய கல்விமானான கலாநிதி மன்மோகன் சிங்கை சோனியாகாந்தி பிரதமராக்கி நாட்டின் மீது கொண்டுள்ள தனது அக்கறையை வெளிப்படுத்தினார். சிலவேளை சோனியா பிரதமராகியிருப்பின் அதிருப்தியாளர்களால் வன்முறை கூட ஏற்பட்டிருக்கும்.



டில்லியில் வசிக்கும் மன்மோகன்சிங் சிறந்த கல்விமான். அவர் 1991 ஆண்டில் நிதியமைச்சராக இருந்தவேளை தனது சொத்துக்களில் தனக்கும் மனைவிக்கும் சிலவற்றை ஒதுக்கிவிட்டு பெரும்பாலானவற்றை பிரதமர் நிதிக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இவ்வாறான நல்ல மனம் படைத்தவர்கள் பற்றி சிறிலங்கா அரசியல்வாதிகள் அறிந்திருந்தும் அந்த உதாரண புருஷர்களைப் பின்பற்றாமல் அதிகாரத்துக்காகவும் பதவிக்காகவும் சண்டையிடுகின்றனர்.

எவ்வாறாயினும் தற்போதுள்ள நிலையில் மக்களுக்கு சேவையாற்றும் பொருட்டு அரசு ஒரு சரியான வழிமுறையைக் கையாள வேண்டும். அதற்காக எதிர்க்கட்சிக்குப் பாதிப்பு ஏற்படாமல் மக்களுக்குப் பொருத்தமான சட்டம் ஒன்றைக் கொண்டுவர வேண்டும்.

இறுதியாக அரசு முகம் கொடுத்துள்ள அடுத்த பிரச்சினை விடுதலைப் புலிகளுடனான பேச்சு. அவர்களுடன் பேசசு நடத்துவதாயின் அரசுக்குப் பெரும்பான்மை பலம் தேவை.அப்போதே புலிகளும் சந்தேகமின்றிப் பேச்சுக்களில் கலந்து கொள்வர். இல்லையேல் பெரும்பான்மையற்ற அரசொன்றுடன் பேசவிரும்பாது பேச்சுக்களிலிருந்து விலகலாம். அண்மையில் தேரர்கள் சத்தியப் பிரமாணம் எடுக்கச் சென்ற வேளையில் நடைபெற்ற சம்பவத்தை நாடே அறியும். அதன் மூலம் சிறிலங்காவில் சனநாயகத்தின் போக்கு புலப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமைகளில் நாடு மீண்டும் ஒரு பொதுத் தேர்தலுக்குத் தள்ளப்படுமா என்பது அனைவரினதும் வினாவாகும்.

**ரஞ்சித் ஆனந்த ஜெயசிங்க (லங்காதீப)**
**தமிழில்–வடிவேல்.**

# டெங்குநோயினால் 6 மாதங்களில் தென்பகுதியில் 33பேர் பலி!

(கொழும்பு)

சிறிலங்காவின் ஐந்து மாவட்டங்களில் டெங்குநோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாகவும், இந்த ஆண்டில் இதுவரை 33பேர்டெங்குநோயினால் மரணமடைந்துள்ளதாகவும், சிறிலங்கா சுகதாரத் திணைக்கள வட்டாரங்கள் கூறுகின்றன.

அனுராதபுரம், மாத்தளை, காலி, மாத்தறை,புத்தளம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் டெங்குக் காய்ச்சல் கடுமையாகப் பரவியுள்ளது. இவ்வாண்டில் ஜூன் 18ஆம் திகதிவரை 5434 டெங்குநோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் 33பேர் இறந்துள்ளனர் என சுகாதாரத்திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# செல்வந்த வர்த்தகர் ஒருவர் கடை உடைப்பு தொடர்பாகக் கைது

(கொழும்பு)

கொழும்பில் செல்வந்த வர்த்தகர் ஒருவர் கடை உடைப்பில் ஈடுபட்டமைக்காகக் கைது செய்யப்பட்டுள்ளார். நாரஹேன்பிட்டியில் இசைக்கருவிகள் விற்பனை நிலையத்தின் கண்ணாடிகளை உடைத்து உட்புகுந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான கருவிகளைக் களவாடியதாகக் குற்றம் சாட்டப்பட்டு இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (32)

# கந்தளாய் சீனித்தொழிற்சாலையை மீண்டும் இயங்கவைக்க முயற்சி

கந்தளாய் சீனித் தொழிற்சாலை மீண்டும் செயற்படவுள்ளது. அதற்கான சகல நடவடிக்கைகளும் அடங்கிய அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்குமாறு சிறிலங்காவின் உட்கட்டுமான அபிவிருத்தி அமைச்சர் அதாவுல்லா பிரதேச செயலரிடம் கேட்டுள்ளார்.

அண்மையில் கந்தளாய்க்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சா கந்தளாய்ப் பிரதேச செயலர், அலுவலர்களுடன் உரையாடும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இசீனித்தொழிற்சாலை 1993 இல் இருந்து மூடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இத்தொழிற்சாலை 1962 இல் ஆரம்பிக்கப்பட்டது. 1993 இல் இது மூடப்படும் போது இதன் பெறுமதி 4000 மில்லியன் ரூபாவாக இருந்தது.

## விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

கூரைத்தகடுகள் மோசடி செய்தது தொடர்பாக விளக்கமறியலில் உள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லிலந்த பெரேராவை இம்மாதம் 24 ஆம் திகதிவரை மேலும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.




## 10

★ ஐரோப்பிய பாராளுமன்றத்திற்கான. அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் ஆரம்பம்.

## 11

★.அமெரிக்க முன்னாள் சனாதிபதி றொனால்ட் றீகனின் இறுதிச்சடங்குகள் கலிபோர்னியாவில் முழு அரச மரியாதை யுடன் நடைபெற்றது.


இறுதிசசடங்கு நிகழ்வில்

★ ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் அமெரிக்க இராணுவத் தொடரணியை இலக்கு வைத்து கார்க்குண்டுத் தாக்குதல் நடைபெற்றது.


தொடரணிமீது- தாக்குதல்

## 12

★ ஈராக் இடைக்கால அரசாங்கத்தின் பிரதி வெளிவிவகார அமைச்சர் பஸ்ஸாம் கூபா தலைநகர் பாக்தாத்தில் சுட்டுக்கொலை.

* சவுதி அரேபியாவில் அமெரிக்கப் பொறியியலாளர் போல் ஜோன்சன் அல்-ஹைதாவினரால் கடத்திச் செல்லப்பட்டார்.

## 13

★ காஷ்மீரில் சிறிநகரில் உள்ள பிரபல உல்லாசப்பயணிகள் ஹோட்டல் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத்தாக்குதலில் 4பேர் பலி, 23பேர் காயம்.

★ சீனாவில் லிமானிங் மாகாணத்தில் பாஞ்சில் நகரில் உள்ள ஆற்றுப்பாலம் திடீரென இடிந்து வீழ்ந்ததில் 30 கார்கள் ஆற்றில் வீழ்ந்தன.

★ சீனாவில் ஜியாங்ஹி பிராந்தியத்தில் பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் 16 பெண்கள் உடல் கருகிப்பலி.

★உலக பொருளாதார அமைப்பு தனியார் மயமாக்கலை ஊக்குவிப்பதாகக் கூறி ஆயிரக்கணக்கானோர் தென்கொரியத் தலைநகர் சியோலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

★ ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் தென்கிழக்குப் பகுதியில் பொலிஸ் ரோந்துக்குழு மீது நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில் 04 பொலிசார் உட்பட 12 பேர் பலி.

★ வடமேற்கு பாக்தாத்தில் கல்வித்துறையின் மூத்த அதிகாரி இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை.

★துருக்கியில் நடைபெறவுள்ள நேட்டோ மாநாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்து தலைநகர் அங்கராவில் எதிர்பார்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

★ இந்தியாவும் ரஷ்யாவும் இணைந்து கூட்டு ஒப்பந்தத்தின் கீழ் வடிவமைக்கப்பட்ட 'பிரமோஸ்'என்ற ஏவுகணை விண்ணில் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.



பிரமோஸ் ஏவுகணை.

★ ஈரானில் சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட சாராயம் அருந்திய 12 பேர் உயிரிழுந்தனர், 20 பேர் ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் உள்ளனர். இவர்களில் 5பேர் கண்பார்வையை இழக்கும் நிலையில் உள்ளனர்.

## 14

★ஈராக்கில் இடம் பெற்ற இரண்டாவது தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் அமெரிக்க நிறுவனமான ஜெனரல் எலக்ரிக்கல் கம்பனியின் கீழ் பணி புரியும் இங்கிலாந்து, அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்கள் 5 பேர் உட்பட 12 பேர் கொல்லப்பட்டனர். 50 இற்கு மேற்பட்டோர் காயம்.


தற்கொலைத்தாக்குதலில்.

★ ஈராக்கில் அபுகிராய் சிறைச்சாலையில் இருந்து 585 ஈராக்கியக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

★ ஈராக்கில் மிராஜாப் என்னும் புனித நகரில் இடம் பெற்ற திடீர்ச் சோதனையில் சியா ஆன்மீகத்தலைவர் அமெரிக்கத் துருப்பினரால் கைது செய்யப்பட்டார்.

## 15

★ கொலம்பியாவில் போதைப்பொருள் கடத்தல் கும்பலைச் சேர்ந்த 34 விவசாயிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ குஜராத் மாநில முதல்வர் நரேந்திர மோடியைக் கொலை செய்வதற்கு அம் மாநிலத்தில் மறைந்திருந்ததாகக் கூறி நான்கு பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.


சுட்டுக்கொல்லப்பட்டோர்.


## 16

★ பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்திற்கு அருகேயுள்ள வீதியில் பயணிகளை ஏற்றிச்சென்ற பேருந்து ரக் வண்டியுடன் மோதி அருகில் உள்ள பாலத்துடன் மோதி பாலத்தை உடைத்துக் கொண்டு பாலத்தினுள் வீழ்ந்ததில் 40 பேர் பலி.

★ ஈரானின் வடபகுதியில் உள்ள எண்ணெய் வயல்களின் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி காலி அல்பலபாலி சுட்டுக்கொல்லப்பட்டார்.

★ ஆப்கானிஸ்தானில் சர்வதேச அமைதி காப்புப் படையினரின் வாகனத் தொடரணியை இலக்கு வைத்து நடாத்தப்பட்ட தாக்குதலில் பொது மக்கள் மூவர் பலி.

★ இந்தியாவின் கர்நாடாக மாநில மங்களூரில் இருந்து மும்பை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயில் கரான் ஜாடி என்ற இடத்தில் விபத்துக்குள்ளானதில் 25 பேர் பலி, 100 இற்கு மேற்பட்டோர் படுகாயம்.


ரயில் விபத்து

# ஜெய்ப்பூர் நிறுவனப் பயனாளிகளுக்கான எழுத்தாற்றல், விளையாட்டு விழா

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் தனது 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி தனது பயனாளிகளுக்கான கவிதை, கட்டுரை சிறுகதைப் போட்டிகளை:யும், எதிர்வரும் யூலைமாதம் 24 ஆம் திகதி சனிக்கிழமை விளையாட்டுப் போட்டியினையும் நடாத்தவுள்ளது.

கவிதை, கட்டுரை, சிறுகதை ஆக்கங்கள் வலுவிழந்தோரின் பாதிப்புக்கள், அனுபவங்கள், உணர்ச்சிகள், மறுவாழ்வு போன்றவற்றைக்கருப்பொருளாகக் கொண்டிருக்க வேண்டும். குறைந்தது 300 சொற்களுக்கும் கூடியது 500 இற்கும் இடைப்பட்டதாக அமைதல்வேண்டும். ஆக்கங்கள் யூலை மாதம் 5ஆம் திகதிக்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற ஆர்வமுள்ள எமது பயனாளிகள் எதிர்வரும் யூலை மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக இல.05 பழைய பூங்கா வீதி சுண்டிக்குழி யாழ்ப்பாணத்திலுள்ள காரியாலயத்தில் தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளவும். முச்சக்கரவண்டி, சைக்கிள் ஓட்டம், தடகளப்போட்டிகளில் கலந்து, வலுவிழந்தோரின் தனித்திறமைகளை சமூகத்திற்கு வெளிக்காட்டிப் பாராட்டுக்களையும், பரிசில்களையும் பெற்று மகிழுமாறு நிறுவனமுகாமைத்துவக் குழுவினர் கேட்டுள்ளனர்.

# மரநடுகை

(கண்டாவளை)

சூழற் பாதுகாப்பு மாதத்தையொட்டி கண்டாவளைப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் பிரதேச இணைப்பாளர் காசிநாதன் தலைமையில் கடந்த திங்களன்று மரக்கன்றுகள் நாட்டும் வைபவம் தர்மபுரம் மேற்கு ஆலடிக் குளத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிராம உத்தியோகத்தர், புளியம் பொக்கணை கமநல கேந்திர நிலைய உத்தியோகத்தர், மனிதவள அலுவலர், கமத்தொழில் காப்புறுதி உத்தியோகத்தர், கமக்கார அமைப்பினர், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்களால் சூழல் பாதுகாப்புத் தொடர்பாக பொது மக்களுக்கு விரிவாக விளக்கிக் கூறப்பட்டது. (14)

# குமுழமுனைக் கிராமத்தில் பார்த்தீனியம் களைகள் அழிப்பு

(புதுக்குடியிருப்பு)

முல்லை. மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், விவசாயத் திணைக்களமும் இணைந்து குமுழமுனை கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பார்த்தீனியம் தேடி அழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டது.

வலய அரசியல் துறைப்பொறுப்பாளர், த.பொ.மே. நிறுவனத்தின் பிரதேச இணைப்பாளர், குமுழமுனை விவசாயப் போதனாசிரியர், குமுழமுனை மத்தி கிராம அலுவலர் மற்றும் கமக்காரர் அமைப்புப் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் [illegible] நம[illegible] விலானோர் இதில் ஈடுபட்டனர். (0[illegible]

# பெரியதம்பனை உபதபாலக தபால் விநியோகத்தில் முறைகேடு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா பெரியதம்பனை உபதபாலகத்தில் தபால் விநியோகத்தில் முறைகேடு நிலவுவதாக அப்பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ் உபதபாலகத்தில் கடமையாற்றும் தபால் ஊழியர் தபால்களை முறையாக விநியோகிப்பதில்லை எனவும், தபால்களுக்கு உரியவர்கள் அப்பகுதியில் இல்லை எனக் கூறி தபால்களைத் திருப்பி அனுப்புவதாகவும், ஒருவருக்குரிய கடிதத்தை வேறு ஒருவரிடம் கொண்டு சென்று கொடுப்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

தபால் ஊழியரின் நடவடிக்கை தொடர்பாக பெரியதம்பனை உபதபாலதபரிடம் முறையிட்ட போதும அவர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (10)

# அடிக்கல் நாட்டல்

(அலுவலக செய்தியாளர்)

பூநகரி வாடியடிப்பகுதியில் நெற்களஞ்சியத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 16 ஆம் திகதியன்று நண்பகல் இடம் பெற்றது.

தமிழீழத் தேசியக்கொடியினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பூநகரிப்பிரதேச இணைப்பாளர் மயூரன் ஏற்றி வைத்தார்.

மங்கலவிளக்கேற்றலினைத் தொடர்ந்து நெற்களஞ்சிய கட்டடத்திற்கான அடிக்கல்லினை கிளி.அரச அதிபர் தி.இராசநாயம் நாட்டிவைத்தார். இந்நிகழ்வில் த.பொ. மே நிறுவன விவசாயப் பகுதி இணைப்பாளர், பூநகரி கமநல சேவை நிலையத் தொழில் நுட்ப உத்தியோகத்தர் மற்றும் விவசாய அமைப்புப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.(சோ,கு)

# சாரணிய மாணவர் சேவை

(வட்டக்கச்சி)


வட்டக்கச்சிப் பிரதேசத்தில் உள்ள கிளி.இராமநாதபுரம் மகாவித்தியாலய சாரணர் குழுக்கள் தமது சேவைகளை நடாத்தி வருகின்றன. வட்டக்கச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலய சாரணர் குழுக்கள் சாரணர் வாரத்தை முன்னிட்டு தமது பாடசாலை சாரணிய வளர்ச்சிக்காக வீடுகள், கடைகள், பொது இடங்கள் ஆகியவற்றிற்குச் சென்று வேலைகள் செய்து நிதி திரட்டி வருகின்றனர். மேலும் இந்த மகாவித்தியாலய மாணவர்கள் ஆலயத் திருவிழா, விளையாட்டு நிகழ்வுகள் போன்ற வற்றிற்குச் சென்று உரியவர்களோடு தோளோடு தோள் நின்று ஒழுங்கு படுத்தலில் ஈடுபட்டும் வருகின்றனர். (12)

# ஒட்டுசுட்டான் பகுதியிலும் கால்வாய் நோய் இனங்காணல்

ஒட்டுசுட்டான் கால்நடை வைத்தியர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கால்வாய் நோய் ஏற்பட்டுள்ளது. முன்னர் மாங்குளத்தில் இந்நோய் காணப்பட்ட போதிலும் தற்போது பழம்பாசி, தண்டுவான் போன்ற இடங்களில் பரவியுள்ளது.எனவே, ஒட்டுசுட்டான் கால்நடை வைத்தியர் பிரிவுக்குட்பட்ட கால்நடைப் பண்ணையாளர்கள் அனைவரும் ஒட்டுசுட்டான் கால்நடை வைத்திய பணிமனையுடன் தொடர்பு கொண்டு உங்கள் பகுதிக்கு இந்நோய் பரவாமல் தடுப்பதோடு, உங்கள் பண்ணைகளுக்கு வரும் கால்நடை அலுவலகர்கட்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கி மாடுகளுக்குத் தடை மருந்தை ஏற்றிக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.(05)

## 02ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகளில்

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 27 | | 21 |
| 12 | | 06 |
| 1972 | | 2002 |



தமிழீழ தேசிய துணைப்படை வீரர்

**இ.உதயன்**

நி.மு:- திருமலை.மாவட்டம்.

த.மு:- 01ஆம் வட்டாரம், நேசன் குடியிருப்பு, புதுக்குடியிருப்பு.

21.06.2002 அன்று ஆனந்தர் புளியங்குளம் பகுதியில் ஏற்பட்ட தவறுதலான வெடி விபத்தின் போது வீரச்சாவடைந்த இம்மாவீரருக்கும் இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"தமிழீழ காவல்துறை சிறப்புப்படையினர்"

(4653)

# பயிர் மாற்றீட்டு திட்ட உதவி

(முல்லைத்தீவு)

குமுழமுனைப் பிரதேசத்தில் நெற்செய்கை செய்த வயல்களில் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் முகமாக உப உணவுப் பயிர்களான. கச்சான், கௌப்பி, பயறு என்பவை 32 பயனாளிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 15 ஆம் திகதி குமுழமுனை கமநல சேவை அபிவிருத்தித் திணைக்களத்தில் விவசாய போதனாசிரியர் அ. விவேகானந்தராசா தலைமையில் இவை வழங்கப்பட்டன. (20)

# நேர்முகப்பரீட்சை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக்கல்வி நிறுவனத்தின் கணக்கியல் தொழில்நுட்பவியலாளர் (A.A.T) கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களிற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 24ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளதால் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பித்து, அழைப்புக்கடிதம் கிடைக்கப்பெற்ற அனைவரையும் உரிய ஆவணங்களுடன் சமுகம் தருமாறு அதிபர் கேட்டுள்ளார். (15)

# கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

2003ஆம் ஆண்டு கல்வியினை முடித்துக்கொண்ட(பட்டம் பெற்றவர்கள், பெறாதவர்கள்) இராமநாதன் நுண்கலை வளாக இசைத்துறை மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் 23.06.2004 காலை 10.00 மணிக்கு இராமநாதன் நுண்கலை வளாக நடேசன் அரங்கில் இடம் பெறவுள்ளது. அனைத்துமாணவர்களையும் தவறாது சமுகம் தரும் வண்ணம் இராமநாதன் கவின் கலை மன்றத்தினர் வேண்டியுள்ளனர். (சோ,கு)

## துவிச்சக்கர வண்டியைத் தவறுதலாக எடுத்துச் சென்றவர் கவனத்திற்கு

இடம்:- 08ஆம் வாய்க்கால், பிள்ளையார் கோயிலடி, உருத்திரபுரம்.

காலம்:- 22. 04. 2004 வியாழன் மாலை நான்கு (04) மணியளவில்

தொலைந்த துவிச்சக்கரவண்டி இலக்கம் :-1043679 கீறோ ஆண்களுக்குரியது.

மேற்படி துவிச்சக்கர வண்டியைத் தவறுதலாக மாற்றி எடுத்துச் சென்றவர் அதனைக் காந்தி நிலையத்தில் தொடர்புகொண்டு ஒப்படைத்துவிட்டு தமக்குரிய துவிச்சக்கர வண்டியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காந்தி நிலையம்,
08ஆம் வாய்க்கால்,
உருத்திரபுரம்.

(4714)

## இரண்டாம் ஆண்டு அழியாத நினைவுகள்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 29 | | 14 |
| 08 | | 06 |
| 1938 | | 2002 |



**அமரர் கந்தன் துங்கரத்தினம்**

(ஓய்வுபெற்ற அதிபர்)

திருமுறிகண்டி இந்துவித்தியாலயம்.

ஈராண்டாகியும் ஈரமின்னும்
காயாத கண்களால் தேடுகிறோம்
எம் குடும்ப விளக்கே உன்னை.

"அமுதாலயா"
வள்ளிபுனம்.

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(4652)

# இன்று தொடக்கம்

# கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம்

1. கண்ணிவெடிகளும் வெடிபொருட்களும் உங்கள் உயிருக்கும் உடலுக்கும் அச்சுறுத்தலாய் உள்ளன.
2. அபாயக் குறியீடுகளையும் எச்சரிக்கைப் பலகைகளையும் அலட்சியம் செய்யாதீர்கள்.
3. ஆபத்தான இடங்களுக்குச் செல்லாதீர்கள், ஐமிச்சமான பொருட்களைத் தொடாதீர்கள்.
4. உங்கள் சுற்றாடல் பாதுகாப்புடையதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
5. விழிப்புணர்வு நிகழ்வுகளில் தவறாது பங்குகொண்டு கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுங்கள்.
6. கண்ணிவெடிகள் சம்பந்தமாக நீங்கள் அறிந்தவற்றை அயலவர்களுக்கும் சொல்லுங்கள்.
7. அருகிலுள்ள வெண்புறா கண்ணிவெடி விழிப்புணர்வுத் தொடர்பகத்தின் சேவையை நாடுங்கள்.

யுனிசெவ் வெண்புறா-வன்னி

(சி-9848)

# இந்திய-பாக் உயர்மட்டப் பேச்சுவார்த்தை

# அமைதிப்பேச்சுத் தொடர்வதற்கு வழிவகுக்கும்!

## வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர்

**தெற்காசியப் பகுதியில் அணுவாயுத அபாயத்தைக் குறைப்பதற்கான வழிவகைகள் குறித்து இந்தியாவும் பாகிஸ்தானும் நேற்றும் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளன. புதுடில்லியில் நேற்று முன் தினம் ஆரம்பமான இந்தப் பேச்சுவார்த்தைகள் நேற்றுடன் முடிவடைந்துள்ளன.**

உயரதிகாரிகள் மட்டத்தில் முதன் முறையாக இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பேச்சுவார்த்தையில் அணுவாயுதப் பயன்பாடுகள் தொடர்பாக இரு நாட்டிற்குமிடையே பரஸ்பர நம்பிக்கையை மேம்படுத்துவது பற்றிய நடவடிக்கைகள் குறித்தும் இந்த இரண்டு நாட்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது.

இந்தியக் குழுவிற்கு வெளியுறவு அமைச்சகத்தின் கூடுதல்செயலர் ஸ்ரீகாந்சர்மா தலைமை வகிக்கின்றார். இதேவேளை இந்தியக் குழுவில் அணுசக்தித்துறை, பாதுகாப்பு அமைச்சக ஆராய்ச்சி அபிவிருத்தி அமைப்பு ஆகியவற்றின் நிபுணர்களும் அடங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இரு நாட்டு அதிகாரிகளும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்திய-பாகிஸ்தானிடையேயும் நேரடித் தொலைபேசி வசதிகளை ஏற்படுத்த இருநாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன. இது இருநாடுகளிடையேயும் அணுவாயுத பிரச்சினைகள் குறித்துத் தவறான கருத்துக்கள் உருவாகாமல் தடுக்கவும், அணுவாயுத அபாயத்தைக் குறைக்கவும் மட்டும் முழுஅளவில் பயன் படுத்தப்படும்.

தற்போது இருநாடுகளின் இராணுவ இயக்கங்களின் தலைமை இயக்குனர்களிடையே உள்ள நேரடித் தொலைபேசிகளும் மேம்படுத்தப்படவுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்திய-பாகிஸ்தான் இடையே புதுடில்லியில் நடைபெற்ற அதிகாரிகள் மட்டப்பேச்சுக்கள் சுமூகமான சூழ்நிலையில் ஆக்கபூர்வமான முறையில் முடிவடைந்துள்ளது என்றும் இந்தியா கூறியுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தை தொடர்பாக நேற்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் இரு நாடுகளுக்குமிடையேயான அமைதிப் பேச்சுக்களைத் தொடர்வதற்கும், நல்ல பயனை எட்டுவதற்கும் இது உதவும் என்று கூறியுள்ளார்.



அணு ஆயுதம் சம்பந்தமான பேச்சுக்களில் ஈடுபட்ட இந்திய, பாகிஸ்தானிய உத்தியோகத்தர்கள்.

# இந்தியா,பாகிஸ்தான், சீனா கலந்துகொள்ளும் வெளியுறவு மட்டப் பேச்சுவார்த்தை

இந்தியா-பாகிஸ்தான், சீனாவுடன் வெளியுறவு மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது. இந்த முக்கோணப் பேச்சுவார்த்தை சீனாவில் நடைபெறவுள்ளது.

ஆசிய ஒத்துழைப்புக்கான பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்காக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் நேற்று சீனா சென்றுள்ளார்.

சீனாவின் கடற்கரை நகரமான ஹின்டாவில் இந்திய வெளியுறவுத்துறை அமைசச்சர் நட்வர்சிங் இன்று பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் குஸ்ஸித் முகமட் கஸ்தூரியுடன் பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

அத்துடன் நாளை சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் லீளா பொக்ஸிங்குடனும் பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

# இந்திய பாதுகாப்பு நிலவரம் குறித்து பிரதமர் தலைமையில் கூடி ஆராய்ந்தது

பாதுகாப்பு மத்திய அமைச்சரவைக் கூட்டம் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நேற்றுமுன் தினம் புதுடில்லியில் நடைபெற்றுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் பிராணாப் முகர்ஜி உட்துறை அமைச்சர் சிவராஜ்பட்டேல், நிதிஅமைச்சர் ப.சிதம்பரம், வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வந்சிங் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேசியப்பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.டிக்சிற், இராணுவத் தலைமைத் தளபதி என்.சி.ஹித் ஆகியோரும் இக்கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர். நாட்டின் பாதுகாப்பு மற்றும் எல்லையிலுள்ள பாதுகாப்பு நிலைமைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானில் மீண்டும் பயிற்சியில் ஈடுபடும் தீவிரவாதிகள்; குற்றம்சாட்டுகின்றது இந்திய இராணுவம்

பாகிஸ்தானில் மூடப்பட்டிருந்த தீவிரவாத பயிற்சி முகாம்கள் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளதாகவும் இதில் சுமார் 500 பேர் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் இந்திய இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது.

முக்கியமான முகாம் மங்கல வனப்பகுதியில் இருப்பதாகவும் இங்கு சுமார் 300 பேரும், மற்றொரு மலைப்பகுதியிலுள்ள முகாமில் சுமார் 200 பேரும் தீவிரவாதப் பயிற்சிகளில் ஈடுபடுவதாகவும் இந்திய இராணுவம் கூறியுள்ளது.

பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குள் ஊடுருவ முயன்ற தீவிரவாதிகளிடம் விசாரணை செய்யப்பட்டதில் இந்தத்தகவல் தெரிய வந்துள்ளதாகவும் இந்திய இராணுவம் கூறுகிறது. இதேவேளை பாகிஸதானின் உளவுப்பிரிவு அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்திய தேடுதலில் தீவிரவாதிகள் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளதாகவும் கூறுகின்றது.

# 14 பேர் உயிருடன் எரிப்பு விவகாரம் உச்ச நீதிமன்ற விசாரணை இன்று

கோத்ரா ரயில் எரிப்பையடுத்து தொழிற்சாலை எரிப்பு வழக்கு உச்சநீதிமன்ற உத்தரவுப் படி மும்பையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு நீதிமன்றத்தில் இன்று ஆரம்பமாகின்றது.

கோத்ரா ரயில் எரிக்கப்பட்ட மறுநாள் பெரும் கலவரம் ஏற்பட்டது. இதன்போது வடதோராவிலிருந்த தொழிற்சாலை ஒன்று எரிக்கப்பட்டுள்ளது. இதில் 14பேர் உயிருடன் கொல்லப்பட்டனர்.

இந்தக் கொலை தொடர்பாக 21 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களுக்கான வழக்கு விசாரணை குஜராத்தில் நடைபெற்ற வேளை இவர்கள் விடுவிக்கப் பட்டனர்.

ஆனால் இந்த வழக்கை வேறு மாநிலத்தில் நடத்த வேண்டும் என்று ஷகீரா ஷேக் என்பவர் உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இதனையடுத்து இந்த வழக்கு விசாரணை மும்பை மாற்றப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்ட 21 பேரையும் மீண்டும் விசாரணை செய்யுமாறு மும்பை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# வாக்காளர் மோசடிக் குற்றச்சாட்டு தனித்தனி மனுக்கள் சமர்ப்பிப்பு

### – இந்திய தேர்தல் ஆணையகத் தலைவர்

தமிழகத்தில் வாக்காளர் மோசடி தொடர்பான குற்றச்சாட்டு மனுக்களை தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் தனித்தனியாக கையளித்துள்ளதாக தேர்தல் ஆணையகத் தலைவர் நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய தேர்தல் ஆணையாளர் தோமஸ், தமிழக வாக்காளர் மோசடி தொடர் பான தனது விசாரணை அறிக்கை யினை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஏழாம் திகதி தேர்தல் ஆணையகத் திடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

# தேர்தலில் தோல்வியுற்றவர்களுக்கு வாரியத் தலைவர் பதவி கிடைத்தது

கடந்த மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்களுக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா வாரியத் தலைவர் பதவி வழங்கியுள்ளார். அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஏழு பேர் உட்பட 15 பேருக்கு வாரியத் தலைவர் பதவி நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

## ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு கட்சி உடைகிறது

ஆந்திரா மாநில சட்டசபை தேர்தலில் சந்திரபாபு நாயுடுவின் தெலுங்குதேசம் கட்சி தோல்வி அடைந்து ஆட்சியை பறிகொடுத்ததைத் தொடர்ந்துகட்சி உடைந்து சிதறுகின்றது. முன்னாள் அமைச்சர், 2 முன்னாள் எம்.பி,ஒரு முன்னாள் எம்.எல்.ஏ. உட்பட 40 முக்கிய தலைவர்கள் கட்சியைவிட்டு விலகினார்கள்.


## நினைவழியா நினைவுகளில்...



பெர்னாண்டோ அகஸ்ரின்



அகஸ்ரின் திரேசம்மா



அகஸ்ரின் வசந்தரூபன் (லெப். இலக்கியன்)



அகஸ்ரின் ஜஸ்மின் சுதர்ஜினி (ஓவியா)

| | | | | |
|---|---|---|---|---|
| அன்னை மடியில் : | 1941-05-31 | 1947-09-17 | 1977-10-19 | 1980-12-17 |
| ஆண்டவன் அடியில் : | 1986-03-23 | 1996-04-05 | 2004-05-02 | 2000-06-21 |

பாசத்துடன் அரவணைத்து - எமை
பண்புடனே வளர்த்தீர்கள்.
கண்ணிலும் காணாமல் - அப்பா!
காலன் கடலோடு கொண்டு சென்றான்.
கண்டு நாம் பதற - அம்மா!
கண்முன்னே தெருவில் கொன்றான்.

அறுவரும் மிகுதியாகி
ஆடிப்பாடி மகிழ்ந்திருந்தோம்.
ஒருவரும் நினையாவண்ணம் - தம்பி...!
உனக்கும் காலன் கடலில் வந்தான்.
விதிவராத சிறுமலரே! - நீயும்
வீணாக மடிந்துவிட்டாய்.

தேறுதற்கு வழியே இன்றி
தேம்பி நாம் தவிக்கின்றோம்.
ஆறுதலை அனைவரும் பெற
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

213, சிவசுந்தரம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

(4614)

குடும்பத்தினர்

## யூரோ-2004 கால்பந்து போட்டி-

# கால் இறுதிப்போட்டிக்கு செக்குடியரசு முன்னேறியது வலுவான ஜேர்மனியை ருஷ்ஷியா சமப்படுத்தியது

போர்த்துக்கல் நாட்டில் நடைபெற்று வரும் யூரோ-2004 கால்பந்து சுற்றுப் போட்டியில் கால் இறுதிக்குத்தகுதி பெற்ற முதலாவது நாடு என்ற பெருமையைச் செக்குடியரசு பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற குழு Dக்கான லீக் போட்டி ஒன்றில் பலம்வாய்ந்த நெதர்லாந்து அணியை 3-2 என்ற கோல் எண்ணிக்கையில் தோற்கடித்ததன் மூலம் செக் குடியரசு கால் இறுதிக்குத் தகுதி பெற்றது.

இந்தப் போட்டியில் இரண்டு கோல்களால் பின்னணியில் இருந்த செக்குடியரசு அபாரமாக விளையாடி வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை போற்றோ நகரில் நடந்த மற்றுமொரு பரபரப்புப் போட்டியில் ஜேர்மனியை ருஷ்ஷியா வெற்றி தோல்வியின்றி முடித்துக் கொண்டது. இதில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெற முடியவில்லை.



நேற்று முன்தினம் போர்த்துக்கல்லில் நடைபெற்ற யூரோ -2004 கால் பந்துப் போட்டியில் ஜேர்மனி வீரர்களுக்கிடையில் பந்தை செலுத்தும் ருஷ்ஷியா வீரர்விற்றவிஜல் அஸ்ரப் ஜிவ்ஸ் (மத்தியில்)

வலுவான ஜேர்மனியைக் கோல் போடவிடாது ருஷ்ஷியா திறமையாகத் தடுத்தாடியதால் ஜேர்மனியின் கோல்பெறும் வாய்ப்புக்கள் அனைத்தும் தோல்வியில் முடிந்தது. அதேவேளை ருஷ்சியா அணியும் திறமையாக ஆட்டத்தை வெளிப்படுத்தி ஜேர்மனியின் கோல் பகுதியை ஆக்கிரமித்த போதும் அம்முயற்சிகளைக் கோல்காப்பாளரும் அணித் தலைவருமான ஒலிவர்கான் திறமையாகச் செயற்பட்டுத்தடுத்து நிறுத்தியதால் அம்முயற்சி கை கூடாமல் போனது.

இதனை அடுத்து ஜேர்மனி கால் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறுவதற்குச் செக்குடியரசு அணியை வென்றாக வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளது.



ஒலிவர் கான்

## -ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடர்-

# இந்தீய கிரிக்கெட் அணியில் தமிழ் நாட்டின் மூன்று வீரர்கள்

சிறிலங்காவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஆசியக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ளும் இந்திய அணி வீரர்கள் பட்டியலில் தமிழ் நாட்டைச்சேர்ந்த முரளிகார்த்திக், ஹேமன் பதானி, எஸ்.பாலாஜி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

பெங்களூரில் இந்திய கிரிக்கெட் வாரிய செயலாளர் எஸ்.கே.நாயர் 20 வீரர்கள்கொண்ட பட்டியலை நேற்று வெளியிட்டார். சௌரவ்கங்குலி, ராகுல்ராவிட், சச்சின் டெண்டுல்கர், வி.வி.எஸ்.லக்ஸ்மன், முகமட் கைவ், ஹர்பஜன்சிங், பார்தீவ்பட்டேல், அனில்கும்ளே, முரளிகார்த்திக், ரமீஸ்பவார், ஹேமன் பதானி, சஹீர்ஹான், ஆசிஸ்நெஹ்ரா, அஜித் அகாக்கர், இர்பான் பதான், எஸ்.பாலாஜி, அமீத் பண்டாரி, றோகன் கவாஸ்கர் ஆகியோர் பட்டியலில் உள்ளனர்.

அடுத்த மாதம் 3ஆம் திகதி முதல் எட்டாம் திகதிவரை சென்னையில் நடைபெறும் பயிற்சி முகாமில் இவர்கள் பயிற்சியில் ஈடுபடவுள்ளனர். இந்தப் பட்டியலில் சோப்ராவின் பெயர் இடம்பெறவில்லை.

## அஞ்சு ஜோய்க்கு வெண்கலப் பதக்கம்

அமெரிக்காவில் நேற்று முன்தினம் நடந்த உயரம் பாய்தல் போட்டியில் இந்திய வீராங்கனை அஞ்சு ஜோய் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

6.83 மீற்றர் உயரம் பாய்ந்து இவர் மூன்றாவது இடத்தைப் பெற்றார். மேற்படி வீராங்கனை இந்திய ஒலிம்பிக் போட்டிக்கான குழுவில் நீளம் பாய்தல் வீராங்கனையாக இடம்பெற்றுள்ளார்.



# துவக்க ஆட்டக்காரராக யாரை நியமிப்பது தொடர்பில் வீரர்களின் கருத்து போட்டிக்கு மேலும் வலுச்சேர்க்கும்

## தெரிவுக்குழுத் தலைவர் கிருமானி

இந்திய அணியில் டெஸ்ட் போட்டிக்கு துவக்க ஆட்டக்காரராக யாரை அமர்த்துவது என்பது பற்றி அணியின் தலைவர் கங்குலி மற்றும் வீரர்கள் வெளியிடும் கருத்து கிரிக்கெட் போட்டிக்கு மேலும் வலுச்சேர்க்கும் என தேசிய கிரிக்கெட் வீரர்கள் தெரிவுக்குழுத் தலைவர் சையத் கிருமானி தெரிவித்துள்ளார். சென்னையில் நேற்றுச் செய்தியாளர்களிடம் அவர் தெரிவிக்கையில்,

வீரர்களின் வெவ்வேறு கருத்துக் களினால் எந்தப்பிரச்சினையும் இருப்பதாகத் தான் கருத வில்லை என்றார்.

கிரிக்கெட் போட்டியின் கட்டுக்கோப்பான ஆட்டத்துக்கும் வெற்றிக்கும் இது வழிவகுக்கும் எனத் தான் நம்புவதாக அவர் மேலும் கூறினார்.

# அவுஸ்திரேலியா டெஸ்ட் தொடர் முரளிதரனுக்கு சமர்ப்பணம்

## -மாவன் அத்தப்பத்து

முத்தையா முரளிதரன் அவுஸ்திரேலியா சுற்றுப் பயணத்தில் கலந்து கொள்ளவில்லை என்று எடுத்த தீர்மானத்தையடுத்து அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டு டெஸ்ட் தொடர்களையும் முத்தையா முரளிதரனுக்கு சமர்ப்பணம் செய்யப்போவதாக சிறிலங்கா கிரிக்கெட் அணித் தலைவர் மாவன்அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

உலகசாதனை படைத்த முரளிதரன் பங்குபற்றாததால் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டி ஒரு போராட்டமாகவே இருக்கும் என்றும் அவர் கூறினார். சிறிலங்கா கிரிக்கெட் அணி டார்வின் நகர்போய்ச் சேர்ந்ததும் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றியபோது அத்தப்பத்து இவ்வாறு கூறினார்.

சிறிலங்காஅணி நாளைமறுதினம் டார்வின் வட பிராந்திய அணியு டனான பயிற்சிப் போட்டியில் கலந்து கொள்ளும் இதேவேளை டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இனிங்ஸ் ஒன்றில் 40 முதல் 50 ஓவர்கள் பந்து வீசும் முத்தையா முரளிதரன் அணி யில் இடம்பெறாமை சிறிலங்கா கிரிக்கெட் அணியின் தலைமைத்துவத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என சிறிலங்கா கிரிக்கெட் அணித்தலைவர் மாவன்அத்தப்பத்து நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். இதனைக் கூறுவதற்கு வார்த்தைகள் இல்லை உண்மையில் அதிகளவு பாதிப்புத் முரளி சிந்தித்துப் பார்த்து இந்த முடிவை எடுத்திருப்பார் என்று நான் கருதுகிறேன்.

இந்தத் தீர்மானத்தின் பின்னணியில் நானும் எனது அணியும் உள்ளோம். நாம் இதனை மதிக்கின்றோம். முரளி எடுத்த தீர்மானத்திற்கு எவரும் பின்நிற்பார்கள் என்று நான் கருதவில்லை என்றார். ரங்கனே கேரத், உபுள்சந்தன ஆகியோர் சுழல்பந்து வீச்சாளராக அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். வேகப்பந்து வீச்சாளராக சமிந்த வாசும் டில்கார பெர்னாண்டோ, நுவான்சொய்ஸா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். நீண்டஇடை வேளையின் பின்னர் களுவிதாரண சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார். இரண்டுடெஸ்ட்போட்டிகளில் கலந்து கொள்ளும் வகையில் நேற்று முன்தினம் சிறிலங்கா அணி அவுஸ்திரேலியா புறப்பட்டுச்சென்றமை குறிப்பிடத்தக்கது.



# யூ.என்.எச்.சி.ஆர் நடத்திய சைக்கிள் ஓட்டப்போட்டி; கொலின் பிரபாகரன், விக்டர்டிவன்னியாக்கு முதல் இடங்கள்

உலக அகதிகள் தினத்தை முன்னிட்டு நேற்று ஆண் பெண் இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டப் போட்டி நடைபெற்றது. ஆண்களுக்கான 30மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி மல்லாவியில் ஆரம்பமாகி மாங் குளம் ஊடாக கிளிநொச்சி பொது விளையாட்டு மைதான முன்றலில் நிறைவு பெற்றது.

அதேபோன்று பெண்களுக் கான 17மைல்சைக்கிள் ஓட்டப் போட்டி மாங்குளத்தில் ஆரம்பமாகி கிளிநொச்சி பொது விளையாட்டு மைதான முன்றலில் நிறைவு பெற்றது.

ஐம்பது போட்டியாளர்கள் கலந்து கொண்ட ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் ஜே.கொலின் பிரபாகரன் முதலாமிடத்தினையும், எ.நிசாந்தன் இரண்டாமிடத்தினையும், பி.பாலகுமாரன் மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

அதேபோன்று எட்டு போட் டியாளர்கள் கலந்து கொண்ட பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் செல்வி விக்டர் டிவன்னியா நிலூசினி முதலாமிடத்தினையும், என்.லோஜிகா இரண்டாமிடத்தினையும், எ.பாமினி மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டனர். அத்துடன் ஒருகாலினை இழந்த நிலையில் சைக்கிள் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்ட எம்.கிருபாக ரன்,எட்டாம் இடத்தை பெற்றார். இவருக்கும் இறுதியாக போட்டியினை நிறைவு செய்த பிரபாதரன் ஆகியோருக்கும் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பெற்றது. அத்துடன் இப் போட்டியினை நிறைவு செய்த அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பெற்றன.











யு.என்.எச்.சி.ஆர் நேற்று நடத்திய இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதலிடத்தைப்பெற்ற கொலின் பிரபாகரன் கிளிமாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா அவர்களிடம் பரிசில் பெறுவதையும்,பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதலிடத்தைப்பெற்ற விக்ரர் டிவன்னியாவுக்கு கிளி.மாவட்ட அரச அதிபர் இராசநாயகம் அவர்கள் பரிசில் வழுங்குவதையும் மற்றும் போட்டியை நிறைவு செய்யும் வீரர் ஒருவரையும் படத்தில் காணலாம்.

### சிந்தனைக்கு



இரும்பையொத்த இலட்சிய உறுதியுடனும், எதையும் தாங்கும் இதயத்துடனும், சாவுக்கு அஞ்சாத வீரத்துடனும் எமது வீரர்கள் போராடினார்கள், போர்க்களத்தில் வீரமரணத்தைத் தழுவினார்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 21-06-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
Daily@eezhanatham.com
natham23ela@yahoo.com


## தேர்தல்ஆணையாளரின் சலிப்பு

"மாகாணசபைத் தேர்தலை நடத்துவதினால் நாட்டிற்கு எந்தவித நன்மையும் ஏற்பட்டுவிடப்போவதில்லை. தேர்தலினால் செலவு மட்டுமே யொழிய பிரயோசனம் ஏதுமில்லை" என்ற சிறிலங்காவின் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவின் கூற்றுக்கள் முற்றிலும் சரியானதே.

சிறிலங்காவைப் பொறுத்து கடந்த நான்கைந்து ஆண்டுகளில் வருடம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தேர்தல்களை நடத்தவேண்டிய நெருக்கடியானதொரு நிலை தேர்தல் ஆணையாளருக்கு ஏற்பட்டமையே அவரின்இத்தகைய சலிப்புக்குக் காரணமாகும். அதாவது வருடாந்த உற்சவம் போன்று தேர்தல்கள் நடத்தப்பட வேண்டிய நிலையே சிறிலங்காவில் காணப்படுகிறது.

கடந்த காலத்தில் தேர்தல்கள் ஐந்து வருடங்களிற்கு ஒரு முறை இடம்பெற்றதுண்டு. அதுவும் பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல் என்ற ரீதியில் இவை இடம்பெற்றன. ஆனால் இன்று சனாதிபதித்தேர்தல், பாராளுமன்றத்தேர்தல், மாகாணசபைத்தேர்தல் எனப்பல தேர்தல்கள் நடைபெறுவதோடு அனைத்துத் தேர்தல்களுமே உரியகால இடைவெளியில் நடைபெறுவதாகவும் இல்லை.

ஒரு புறம் ஆட்சிக் கவிழ்ப்புக்கள், மறுபுறம் பதவி விலகல் என்பன காரணமாக அரசாங்கங்களின் பதவிக்காலம், மாகாணசபைகளின் பதவிக்காலம் என்பனவற்றிற்கு முன்பாகவே தேர்தல்கள் அறிவிப்புச் செய்யப்படுகின்றன. அன்றித் தேர்தலை அறிவிப்புச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் எழுகின்றது.

ஆனால், தேர்தல்களில் பயன் ஒன்றும் இல்லை என்பதை அண்மைக்கால நிகழ்வுகள் தெளிவாக, வலியுறுத்துபவையாகவே உள்ளன. எடுத்துக்காட்டாக கடந்த நான்கு ஆண்டுகளில் நடந்த மூன்று பொதுத்தேர்தல்களினால் நாட்டிற்கோ அன்றி மக்களுக்கோ ஏற்பட்டுள்ள பயன்தான் எவை?நாட்டில் தீர்க்கப்பட்ட பிரச்சினைகள்தான் எவை? எடுத்துக்காட்டாக 1994இல் இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தப்படும் எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் சமாதான முயற்சிகளில் அக்கறை காட்டியதாக இல்லை. சமாதான முயற்சிகளை ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாகவே அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த அனைவருமே சமாதானம் பற்றிப் பேசினார்களே ஒழிய சமாதான முயற்சிகளில் எவரும் அக்கறை கொண்டதாக இல்லை. ஆனால் இனப்பிரச்சினையின் விளைவுகளே அடிக்கடி தேர்தலுக்கு அடிப்படையாயின. தேர்தல்கள் வந்தன- ஆட்சிகள் மாறின. ஆனால் நாட்டில் பிரச்சினை எதுவும் தீரவில்லை. மாறாக பிரச்சினைகள் மேலும் மேலும் அதிகரித்தனவே ஒழிய குறைந்த பாடாக இல்லை.

அது மட்டுமல்ல அடிக்கடி வந்த தேர்தல்கள் படிப்படியாக அரசாங்கத்தைப் பலவீனப்படுத்துபவையாகவே இருந்தன. இந்நிலையானது நாட்டிற்கு ஒரு உறுதியான, நிலையான அரசாங்கம் ஒன்று வருவதையே கேள்விக்குள்ளாக்கியது. இதனால் சிறுபான்மை அரசாங்கம் ஆட்சிப்பொறுப்பில் இருக்கவேண்டிய நிலையும் உருவாகியது.

பொதுத்தேர்தலின் நிலையே இவ்வாறிருக்க- ஏன் இந்த மாகாணசபைகள் என்ற கேள்வியுடன் உள்ள இச் சபைகளுக்கான தேர்தல்களில் அர்த்தம் என்ன இருக்கமுடியும்? அதாவது வடக்குக் கிழக்கு மாகணங்களுக்கென உருவாக்கப்பட்ட மாகாணசபைகள் வடக்குக் கிழக்கிற்கு வெளியில் தேவைதானா என்ற கேள்வி ஆரம்பம் முதலே உள்ளது. இந்நிலையில் இச்சபைகளுக்கான தேர்தல் பெரும் பொருள் விரையம் இன்றி வேறு எவ்வாறு இருக்கமுடியும்.

இத்தகையதொரு நிலையில் தேர்தல் ஆணையாளரின் கருத்துக்கள் அர்த்தமுள்ளவையே. சிலபேர் தேர்தல் ஆணையாளரின் கருத்துக்கள் அரசியலின் யாப்பிற்கு மாறானதெனவும் சனநாயகத்திற்கு விரோதமெனவும் அபிப்பிராயப்படக்கூடும். ஆனால் சிறிலங்காவில் தற்பொழுது நடைபெறும் தேர்தல்கள் சனநாயகத்தைப் பாதுகாப்பதற்கானதோ அன்றி அரசியல் யாப்பைக் காப்பதற்கானதோ அல்ல. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான குறுக்குவழி முறையாகவே தேர்தல் மாறிவிட்டது.

இந்த நிலையில் தேர்தல்கள் நாட்டிற்கு மேலும்மேலும் பொருளாதாரச் சுமையை ஏற்படுத்துபவையாகவும், ஒருவகையில் சனநாயகத்தை கேலி செய்பவையாகவும் இருக்குமே யொழிய வேறு எந்தப் பயனையும் கொடுத்துவிடப் போவதில்லை ஆனால் அரசியற் கட்சிகள் இத்தேர்தல்களில் காட்டும் ஆர்வம் எதுவுமே குறையவில்லை. ஏனெனில் நாடும் மக்களும் நன்மையடையவில்லை ஆயினும் அரசியல் வாதிகள் இதில் நன்மையடையாமலில்லை.

# அமெரிக்கத் துறைமுகமொன்றிலிருந்து கரேஜஸ் கடற்படைக் கப்பல் கொழும்பு நோக்கிவரும்

தற்போது சிறிலங்கா கடற்படைத்தளபதி தயாசந்தகிரி அமெரிக்கா சென்றுள்ளார். அமெரிக்க அரசிடமிருந்து "கரேஜஸ்" என்ற கடற்படைக் கப்பலொன்றைப் பெற்றுக் கொள்வதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார்.

அமெரிக்கா கரையோரப் பாதுகாப்பு ஜெனரல் மற்றும் அமெரிக்கபாதுகாப்புத் திணைக்கள உத்தியோகஸ்தர்கள் ஆகியோருடன் இக் கப்பல் குறித்தான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுகின்றார்.

சென்ற திங்கள்கடற்படை அதிகாரிகளும், மாலுமிகளுமாக 12 பேர் கொண்ட குழுவினர் அமெரிக்காவிற்கு சென்றுள்ளனர்.

சிறிலங்கா கடற்படையினால் புதியபெயரிடப்படவுள்ள மேற்படி கப்பலின் கட்டளைஅதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள கப்டன் எஸ்.எஸ்.ரணசிங்கவின் தலைமையிலேயே இக்குழுவினர் சென்றுள்ளனர்.

தற்போது இக் கடற்படை அணியானது அமெரிக்காவின் வடமேற்கு கடற்பகுதியான போர்ட் லண்ட், ஒறேகன் கடற்பரப்புகளில் அமெரிக்க கரையோர காவல் படையினருடன் இணைந்து கடல் ஒத்திகைகளில் ஈடுபட்டு வருகின்றது.

கடற்படைத் தளபதி தயாசந்தகிரி கப்டன் ரணசிங்கவுடன் வோஷிங்டனில் இணைந்து கொள்வார்.

கொழும்பு திரும்பும் வழியில் தளபதி சந்தகிரி தனது சகாக்களுடன் சர்வதேச கடல் சம்பந்தமான அமைப்பின் பொதுச் செயலாளருடனான சந்திப்பு ஒன்றிற்காக லண்டன் செல்வார் என்றும் கூறப்படுகிறது.

'கரேஜஸ்' கப்பலானது தனது கடற்பயணத்தை அமெரிக்காவின் பல்ரிமோன்றிலிருந்து கொழும்பிற்கு மேற்கொள்ளும். இந்து சமுத்திரம்,அத்திலாந்திக் சமுத்திரம் ஆகிய இருபெரும் சமுத்திரங்களின ஊடாக இதன் பயணம் அமையும்.

# இலங்கையின் எண்ணெய்வளம் குறித்து 5 வெளிநாட்டு நிறுவனங்கள் ஆராய்வு

இலங்கையின் மேற்கு, வடக்கு கரையோரங்களிற்கு அப்பால் உள்ள கடற்பகுதியில் எண்ணெய் வளம் உள்ளதா என்பதைக் கண்டறியும் ஆராய்ச்சியில் உதவி செய்ய ஐந்து வெளி நாட்டுக் கம்பனிகள் முன்வந்துள்ளன. இவை நோர்வே, அவுஸ்திரேலியா, சுவீடன் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவையாகுமென எரிபொருள் நிர்மாணத்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

இலங்கையினை அண்மித்த கடற்பகுதியில் சுமார் 20கோடி பீப்பா அளவுடைய எண்ணெய்ப் படிமம் உள்ளதாகப் பூர்வாங்க ஆய்வில் இருந்துதெரியவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எண்ணெய்க் குதம் ஒன்றினைத் தோண்டுவதற்குப் பத்தாயிரம் முதல் பதினைந்தாயிரம் வரையிலான டொலர்கள் செலவாகும் எனவும், ஆனால் இவ்வளவு பணத்தினைச் செலவழிக்கும் நிலையில் அரசாங்கம் இல்லை. எனவே வெளிநாட்டு முதலீட்டையும், நிபுணத்துவத்தையும் நாடவேண்டி இருப்பதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் முறையை மாற்றி அமைத்தபின்பே அடுத்த பொதுத் தேர்தல் நடத்தப்படும்

### ------ சனாதிபதி செயலகம் அறிவிப்பு ------

(கொழும்பு)

தற்போதைய தேர்தல் முறையை மாற்றி அமைத்த பின்பே அடுத்த பொதுத்தேர்தல் நடத்தப்படும் என சனாதிபதி செயலக அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

அரசாங்கத்துக்கு இப்போது பாராளுமன்றத்தில் பெரும்பான்மைபலம் இல்லை. இதனைப் பெற்றுக்கொண்டு தேர்தல் முறையை மாற்றியமைக்கவே அது விரும்புகிறது.

எனவே பெரும்பான்மையைப் பெற சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப்பெறும் முயற்சியில் அரசாங்கம் முயற்சி செய்துவருகிறது. இதற்கு அரசாங்கம் மூன்று அமைச்சர்களை நியமித்துள்ளது. மங்களசமரவீர, சரத் அமுனுகம, நிமல்சிறிபாலடிசில்வா ஆகியோரே இதற்கென நியமிக்கப்பட்ட சிரேஷ்ட அமைச்சர்கள் ஆவர்.

இதேவேளை இது சம்பந்தமாக முக்கிய எதிர்க்கட்சியினரின் அனுசரணையைப் பெறுவதற்கு சனாதிபதி முயற்சி செய்து வருவதாகவும் சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

# விஜயவீராவின் குடும்பத்தினர் குறித்து ஜே.வி.பி. அக்கறை செலுத்தாதது ஏன்?

### சிறில.கடற்படை வட்டாரங்கள் கேள்வி

ஜே.வி.பி.யினர் தற்பொழுது அரசாங்கத்தின் பங்காளிகளாக இருக்கின்றனர். ஆனால் அவர்களின் தலைவர்ரோகண விஜயவீராவின் மனைவியும்,அவரது ஐந்து குழந்தைகளும் இன்னும் கடற்படையின் பாதுகாப்பில் உள்ளனர் இவர்களைப் பற்றி எவ்வித அக்கறையும் காட்டாமல் ஜே.வி.பினர் ஏன் மௌனம் சாதித்து வருகின்றனர் எனச் சிறிலங்காகடற்படை வட்டாரங்கள் தற்பொழுது கேள்வி எழுப்பி உள்ளன. இவர்களுக்கு பாதுகாப்பாக இரண்டு பெண் கடற் படை அதிகாரிகள் நியமிக்கப் பட்டுள்ளனர் இவர்களின் உணவு பராமரிப்பையும் ஏனைய விடயங்களையும் கடற்படையே செய்து வருகின்றது இவர்களை இதுவரை ஜே.வி.பி.யினர் சென்று பார்வையிடவில்லை எனவும் ரோகணவிஜயவீராவின் மூத்த மகனுக்கு தற்பொழுது 23 வயதாகிறதென்றும் கடற்படை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

### -அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி-

# ஜே.வி.பி.பா.உ.வின்மகனுக்கு தேசிய பாடசாலையில் அனுமதி

பாடசாலை அனுமதிகளில் அரசியல் செல்வாக்குகளுக்கு எதிராக தாம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அரசாங்கம் கூறிவருகின்றபோதிலும் ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மகன் குறைந்த புள்ளிகளுடன் முன்னணிப்பாடசாலையொன்றில் அனுமதி பெற்றுள்ளார்.ஜே.வி.பி.யின் மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பிறேமசிறி மனாகே என்பவரின் மகனே இவ்வாறு அரசியல் செல்வாக்கின் மூலம் தேசியபாடசாலையொன்றில் அனுமதி பெற்றுள்ளார்.ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகள் மட்டுமே பெற்றிருந்த இம்மாணவன், தேசிய பாடசாலையொன்றில் அனுமதிபெறுவதற்கு 164 புள்ளிகள் பெற்றிருக்கவேண்டும் என்பதற்கு மாறாக மாத்தறை மாவட்டத்தின் தேசிய பாடசாலையான ராகலவித்தியாலயத்தில் அனுமதிபெற்றுள்ளார்.இது குறித்து ராகல வித்தியாலயத்தின் அதிபர் கூறுகையில், அரசியல்வாதியின் மகன்என்ற ரீதியில் இவருக்கு அனுமதிவழங்குமாறு தேசிய பாடசாலைகள் பணிப்பாளரிடமிருந்து தனக்கு கடிதம் ஒன்றுகிடைத்ததையடுத்தே தான் அனுமதிவழங்கியதாக குறிப்பிட்டுள்ளார்.






## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

உலக கடல்சார் மீன்பிடிப்பகுதிகளில் 70 சதவீதத்துக்கும் அதிகமான இடங்களில் தாக்குப்பிடிக்கக் கூடிய எல்லைவரை அல்லது அதற்கும் அப்பால் பிடிக்கப்படுகிறது.

## வவுனியாவில் நடைபெற்ற சிங்கள மொழி நூல்கள் வெளியீட்டு நிகழ்வில்...







# அடுத்த பாராளுமன்ற அமர்வில் பெரும்பான்மை நிரூபிக்கப்படும்

### ஜே.வி.பி.பிரச்சாரச் செயலாளர் விமல்வீரவன்ச

பாராளுமன்றம் மீண்டும் கூடும் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 113 என்ற பெரும்பான்மை ஆசனங்களை வெளிப்படுத்துமென்றும் ஜே.வி.பி. பிரச்சாரச் செயலாளர் விமல்வீரவன்ச கூறியுள்ளார். இது கூட்டுக் கட்சிகளாக சேர்ந்திருக்கும் எதிர்க் கட்சிக்கு ஒரு சவாலாக இருக்குமெனவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சி எவ்விதமான நடவடிக்கைகளையும் முன் கொண்டு செல்லும் போதும் தமது கட்சிக்கு முழுமையான பெரும்பான்மை இருப்பதை எதிர் வரும் பாராளுமன்றத்தில் தான் நிரூபிக்கப்போவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நாளை விரிவுரைகளைப் பகிஷ்கரிப்பர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நாளை பகிஷ்கரிப்புப் போராட்டமொன்றை நடத்தத் தீர்மானித்துள்ளனர். கடந்த 14ஆம் திகதி முதல் யாழ். பல்கலைக் கழக ஊழியர்கள் நடத்திவரும் தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் சுமுகமான முறையில் தீர்த்துவைக்கப்படசம்பந்தப் பட்டோர் முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும் எனக்கோருவதுடன் இரண்டு தரப்பினரும் இணக்கப்பாட்டிற்கு வந்து மாணவரின் கல்விச்செயற்பாடுகள் சுமுக நிலையை அடைய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரியுமே இப்பகிஷ்கரிப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இதன்போது பரீட்சைகள் எவையும் பாதிக்கப்படாது விரிவுரைகளை மட்டுமே பகிஷ்கரிக்கவுள்ளதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஒருவார காலமாக ஏழு அம்சக்கோரிக்கைகளை முன் வைத்து தொடர்வேலை நிறுத்தப்போராட்டத்தில் பல்கலைக் கழக ஊழியர்கள் ஈடுபட்டுவருகின்றமை தெரிந்ததே. (33)

## இராணு....

தெரிவிக்கையில், கடந்த 18ஆம் திகதி கருணாவிடம் இருந்து விலகி தமிழீழ விடுதலைப்புலிகளிடம் வந்துள்ளோம்.

கருணாவின் செயற்பாடுகள் எங்களுக்குப் பிடிக்கவில்லை. அவரிடம் நாங்கள் எங்களைப் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு கேட்டோம்.

ஆனால் அவர் நீண்டகாலமாக மறுத்து எங்களைத்தடுத்து வைத்திருந்தார்.நாங்கள் தொடர்ந்து அழுத்தம் கொடுத்தவாறே இருந்தோம்.

அப்போது அவர் சொன்னார் தான் சில ஒழுங்குகள் செய்துள்ளதாகவும் அது சரிவந்ததும் எங்களை அனுப்புவதாகக் கூறி வந்தார்.பின்னர் நீண்ட நாட்களின் பின் எங்களுடைய கடுமையான அழுத்தத்தால் எங்களை விட்டுவிட்டார்.

அவராக இப்போது எவ்ரையும் அனுப்பவில்லை. நாங்கள் தான் எங்களுடைய பெற்றோரிடம் செல்லவேண்டும் எனக்கேட்டு தமிழீழ விடுதலைப்புலிகளிடம் வந்துள்ளோம்.

தற்போது நாங்கள் வரும்வரை இராணுவத்தினரின் பாதுகாப்பில் கொழும்பில் இருந்தோம். அப்போது கருணாவும் எங்களுடனேயே இருந்தார். பின்னர் அவர் வேறு இடத்திற்குச் சென்றுவிட்டார்.

கருணா சிறிலங்கா இராணுவத்துடன் தான் இருந்து செயற்படுகிறார். அதைஅவர்கள் இனியும் மறுக்க முடியாது. ஏனெனில் நாங்களும் அங்கு இருந்துதான் தற்போது இங்கு வந்துள்ளோம்.

எனவே நாங்கள் அதனை உறுதிப்படுத்துவோம் என்றார்.

# கிணற்றுள் தவறி வீழ்ந்து பெண் பரிதாப மரணம்

கிணற்றினுள் தவறி வீழ்ந்த குடும்பப்பெண்மணி ஒருவர் பரிதாபகரமாகப் மரணமாகியுள்ளார்.

நேற்று யாழ் கந்தர்மடம் பகுதியில் நடந்த இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தங்கரட்ணம் (வயது62) என்பவரே இறந்தவராவார்.

# வர்த்தகர்சங்கப் பொதுக்கூட்டம்

முள்ளியவளைப்பிரதேச வர்த்தகர்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை பி.ப.3.00 மணிக்கு வித்தியானந்தா கல்லூரி கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு மற்றும் சமகால அரசியல் நிலைதொடர்பாகவும் வர்த்தகர்களின் செயற்பாடு தொடர்பாகச் சிறப்புக் கருத்துரைகளும் இடம்பெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் பிரதேசத்திற்குட்பட்ட சகல வர்த் தகர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு முள்ளியவளைப் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவாணன் கேட்டுள்ளார். (ஆ)

# நாட்டுப்பற்றாளர் நடேசனுக்கு லண்டனில் அஞ்சலிக் கூட்டம்

லண்டனில் நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசனுக்கு அஞ்சலிக் கூட்டமொன்று சிறி முத்துமாரி அம்மன் கோவில் சிவயோகம் மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடை பெற்றது. வைத்திய கலாநிதி என்.எஸ்.மூர்த்தியின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மூத்த பத்திரிகையாளர் சிவநாயகம் மங்கல விளக்கினை ஏற்றிவைக்க, மௌன அஞ்சலியுடன் கூட்டம் ஆரம்பமாகியது. மூத்த பத்திரிகையாளர்களான சிவநாயகம், பொன் பாலசுந்தரம், அஞ்சல் மாலி, மனிதவுரிமை செயற்பாட்டாளர் விசாகன், கரவைக் கவி மற்றும் ஐ.பி.சி. தமிழின் ஒலிபரப்பாளர் எஸ்.கே. இராஜன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

சிறிலங்கா அரசால் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்கள் குறித்து இக்கூட்டத்தில் உரையாற்றிய அனைவரும் கண்டனம் தெரிவித்துள்ளனர். கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் கருத்துக்கள் மற்றும் நன்றியுரையுடன் முடிவடைந்த இக்கூட்டத்தின் இறுதியில் சிறிலங்கா அரசால் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் குறித்துக் கண்டனம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தோடு, நாட்டுப்பற்றாளர் நடேசனின் கொலையோடு சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

## புலிகளின்...

நிலையில்தான் இருக்கிறது.

அந்தக் குற்றச்சாட்டுக் குறித்து விடுதலைப் புலிகளிடம் ஏதாவது ஆதாரம் இருந்தால் , நிச்சயமான சாட்சிகள் ஏதாவது அவர்களிடம் இருந்தால் அதனை நாங்கள் விசாரித்து உண்மையா இல்லையா என்று ஆராய்ந்துகொள்ள முடியும். அதற்கு அவர்கள் நம்பத்தகுந்த ஆதாரங்களை எங்கள் முன் வைக்க வேண்டும் என்றாா.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு -அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஸ் சிறிலங்கா அரசாங்கம் கருணாவைப் பயன்படுத்தித் தங்களுக்கு எதிராகப் போரை நடத்துவதற்கு முயல்வதாகக் கூறியுள்ளார். இதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என சிறில் ஹேரத்திடம் கேட்டபோது,

இல்லை. ஏனெனில் சிறிலங்கா அரசாங்கம் உண்மையில் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடத்தான் முயன்றுகொண்டிருக்கிறது. எனவே இதுபற்றிய பேச்சுக்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

எனவே அப்படிப்பட்ட நிலையில் எந்தவொரு பொறுப்பான அரசாங்கமும் அமைதிப்பேச்சு நடைபெறும் இந்த நேரத்தில் சண்டையை ஆரம்பிக்க விளையும் என நான் நினைக்கவில்லை.

உண்மையில் இதற்கான பதிலை அரசியல் மட்டத்தில் இருந்துதான் சொல்ல வேண்டும். ஆனால் நிர்வாக மட்டத்தைப் பொறுத்தமட்டில் -எங்களைப்பொறுத்தமட்டில், அப்படியான குற்றச்சாட்டுத் தொடர்பான விடயம் தொடர்பாக அப்படி எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை என்றார்.

இதேவேளை தொப்பிக்கல காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் கருணாவிற்கும் இடையில் சண்டை நடைபெற்றதாகச் செய்திகள் கூறுகின்றன. பாதுகாப்புச் செயலர் என்ற வகையில் என்ன கூறுகின்றீர்கள் எனக்கேட்டதற்கு,

தொப்பிக்கல காட்டுப் பகுதியில்அவ்வாறு நடந்ததாக எங்களுக்குத்தகவல்கள் கிடைக்கவில்லை. இதை பத்திரிகைகள் ஊடகங்கள் பெரிது படுத்தியே கூறுகின்றன என நினைக்கின்றேன்.

பொட்டு அம்மான் ரமேஷ் போன்ற முக்கியதளபதிகள் கொல்லப்பட்டதாக அந்தச் செய்திகள் கூறுகின்றன. அது முழுக்க முழுக்கத் தவறானது. அப்படிஒரு தகவலும் கிடையாது.

அங்கு சிறிய அளவில் மோதல் நடைபெற்றிருக்கலாமெனவும் ஏழு அல்லது எட்டுப் பேரளவில் கொல்லப்பட்டிருக்கலாமென எங்களுக்குத் தகவல் வந்துள்ளது.

ஆனால் நிச்சயமாக இந்தத் தகவல் அளவிற்கதிகமாக மிகைப்படுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது என்றார் அவர்.

## இரு....

வரவேற்புரை நிகழ்த்தினார். இந் நிகழ்வு தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமானது.வவுனியா கல்வியியற் கல்லூரி அதிபர் திரு.பேனாட் அவர்கள் வைபவ ரீதியாக இவ்விரு புத்தகங்களையும் வெளியிட்டு வைக்க பிரபல சிங்களப் பாடகர் ஜயதிலக பண்டார பெற்றுக் கொண்டார்.இந்நிகழ்வில் வெளியீட்டு உரையை திரு.திருநாவுக்கரசு நிகழ்த்தினார். சிங்கள பேராசிரியர் சுசரித ஹம்லத் மதிப்பீட்டுரையை நடாத்தினார். பதிலுரையை தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர், க.வே.பாலகுமாரன் நடாத்தினார்.

சிங்களப் பாடகர் ஜயதிலக பண்டாராவுக்கு க.வே.பாலகுமாரன் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார் பேராசிரியர் சுசரித ஹம்லத் அவர்களுக்கு கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை பொன்னாடை போர்த்திக்கௌரவித்தார்.

## சர்வதேச...

யடுத்து ஆசியுரையினை கிளிநொச்சி கந்த சுவாமி ஆலய பிரதமகுரு இரத்தினேஸ் வரக்குருக்கள் வழங்கினார்.

தொடர்ந்து எழுச்சி உரையினை கிளிவலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் கிளி.மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம்கிளி.மாவட்ட அரச சார்பற்ற நிறுவன இணையங்களின் தலைவர் கணேபிள்ளை ஆகியோர் வழங்கினர்.

இடம் பெயர்ந்த மக்கள் அமைப்பின் தலைவர் ராஜா வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம்சார்பாக வெளியிடப் பெற்ற மகஜரினை வாசித்தார்.

அடுத்து கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவரினால் மகஜர்கள் அரச சார்பற்ற நிறுவனத் தலைவரிடம் கையளிக்கப்பெற்று நிறுவனத் தலைவர் மூலம் சிறிலங்கா சனாதிபதி சிறிலங்கா பிரதமர் ஆகியோருக்கான மகஜர்கள் கிளி. அரச அதிபரிடமும் ஐ.நா. விற்கான மகஜரினை இலங்கைக்கான ஐ.நா.பிரதி நிதியிடமும் கையளிக்கப்பட்டன.

கிளிநொச்சி,பூநகரி,கண்டாவளைப் பிரதேச வெகுஜன அமைப்புக்களின் ஏற்பாட்டில் பெருந்திரளான மக்கள் இவ்எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்டனர்.

வவுனியாவில் காலை 10. மணியளவில் பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் அகதிகள் தின நிகழ்வு நடைபெற்றது. இதில் பிரதமஅதிதிகளாக அரசாங்க அதிபர் கே.கணேஸ், ஐ.நா. அகதிகளுக்கான உயர்தானிகராலய வவுனியாப் பிரதிநிதி ஜிம்வோறல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை அலஸ் தோட்ட நலன்புரி நிலையத்தில் அகதிகள் தினம் அனுஷ்டிக்கப் பட்டது. இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்,யூனிசெப், யூ.என். எச்.சி.ஆர்,யு.என்.டிபி. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், சிறுவர் பாதுகாப்புநிதியம்,அக்ஷன் பெய்ம், ஒக்ஸ்பாம், இலங்கை மனித உரிமைகள் ஆணையம் , திருமலை இஸ்லாமிய அபிவிருத் திச் சங்கம், சர்வோதயம், அரச சார்பற்ற நிறுவனங்களின்இணையம் சேவாலங்கா, கிழக்கு புனர்வாழ்வுக் கழகம்ஆகியன இந்நிகழ்வை ஒழுங்குசெய்தன. (25,சோ,கு)

## வன்னிப்...

போன்றவற்றை ஒழங்குபடுத்தி மக்கள் மத்தியில் பூரண விழிப்பு நிலையை ஏற்படுத்தத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

எனவே மக்களின் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்படும் மனிதநேய செயற்பாட்டுக்கான ஒத்துழைப்பைநல்குமாறும்ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (கு)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.